பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று

	ரூ. அ.
வருட சந்தா	3—0
6 மாத சந்தா...	1–12

[வாரப்பதிப்பு]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

	ரூ. அ.
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஹு புரட்டாசி-மீ 17-உ (3—10—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 23.

உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர் கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற
சுத்த கதர் ஜவுளிகள்

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா
விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் சுமாரா திடாளையம்,
டோன் ஹக்காள் டாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

C. N. முருகைய பண்டிதர் மருந்துகள்.

(36-வருஷத்திய அனுபவம்)

திருவள்ளுவர் ஞானவெட்டிப் பிரகாரம் குருமுப்பூவினால் முடிந்தவைகளும் 6 தலைமுறையாய் நாங்கள் கையாண்டு வருகிற சண்டமாருதக் குளம்புநாளக பஸ்பம் சொர்ணரத்னாதி அயக்காந்த சத்துச் செந்தூரம் நாகபஸ்பம் முதலிய சிறந்த அவுஷதங்கள். ஆங்கில டாக்டர்கள் பலர் ஆப்ரேஷன் இல்லாது தீராது என்று கைவிட்ட வியாதியஸ்தர் பலரை 3 வேளை மருந்தினால் குணப்படுத்தி கவுரவ சர்ட்டிபிகேட்டுகளும் சங்கிலி மெடல் முதலானவை பெற்றிருக்கிறோம்.

க்ஷயத்திற்கு

(1) தாளக பஸ்பம் (2) கபகஸ்தூரி எண்ணெ (3) சொர்ணரத்னாதி அயக்காந்த சத்துச் செந்தூரம் (4) சிவப்பிரகாச லேகியம். நெடுங்காலமாய் அவஸ்தைப்படும் க்ஷயம் என்னும் கொள்ளை நோயையும் ஆயுளுள்ளளவும் இம்சிக்கும் (Ashthma) என்னும் சுவாசகாசம், மந்தாரகாசம், ஈளை, இருமல், சகிக்க முடியாத இளைப்பு இதுகளை எமது தாளக பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணெயையும் சேர்த்து அமாவாசை பிரதிமையன்று உபயோகித்து அதன்பின் 12-நாள் சொர்ண ரத்னாதி அயக்காந்த சத்து செந்தூரமும் சிவப்பிரகாச லேகியத்தையும் உபயோகிக்கவும். பின் பௌர்ணமி பிரதிமையன்று மேற்படி பஸ்பத்தையும் கஸ்தூரி எண்ணெயும் சாப்பிட்டு அதன்பின் 12-நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு மறு அமாவாசை பிரதமையில் பஸ்பமும் கஸ்தூரி எண்ணெயும் சாப்பிட்டு பின் 12 நாள் செந்தூரமும் லேகியமும் சாப்பிட்டு விட்டால் பூர்ணசுகமாய் விடும். என் அனுபவத்தில் 1000 கணக்கான வியாதிகளைத் தீர்த்து இருக்கிறேன். குணமாகாவிடில் பணம் வாபீஸ் செய்கிறோம்.

மூன்று வேளையில் சகிக்கமுடியாத இளைப்பு இருமல் இதுகளை மட்டும் சாந்தி செய்யக்கூடிய மருந்து விலை ரூ. 6.

36-நாள் பூர்ண குணமுண்டாக்க ரூபா 75—0—0 (12-நாள் மருந்து தடவை 1-க்கு அனுப்பப்படும்) 12-நாள் மருந்து ரூ. 25—0—0 மூன்று முறைக்கு 36 நாளுக்கு ரூபாய் 75—0—0

மேகசூலைக்கும், மூலத்திற்கும்.

குருமுப்புவினால் முடிந்தது மேகானதி வடகம். அசனவில்வாதி தைலம்.

மேகசூலை, ஜுரசூலை, பக்கசூலை, கால்கை முளிகளில் வீக்கம், கைகால் முடக்கு, கைகால்களில் மோதுகட்டி 10. 15ஹ நடக்க முடியாமலிருக்கும் சூலைக்கு 15-வேளை மருந்தில் சுகமுண்டாகி நன்றாய் நடக்கலாம். இதல்லாமல் ரத்தமூலம், குத்தல், உள்மூலம், அபானத்தில் முளை போலிருக்கும் புரமூலம், மலத்திற்கு முன் பின் ரத்தம்வரும் சீழ்மூலம் முதலிய நவமூலங்களைக் கண்டிக்கும். ஆப்ரேஷன் தேவையில்லை.

15-வேளை மருந்திற்குப் ஒன்றுவிட்டொரு நாள் ஸ்நான தைலத்திற்கு ரூபாய் 15—0—0

ஸ்ரீ நமசிவாயகுரு சந்தானகரணி எண்ணெ. (1)

பெரிய எண்ணெ. (2)

ஸ்திரீகளுக்கு:— பலவகை வெள்ளை ரோகங்கள், மலட்டு ரோகம் மாதவிடாய் காலத்தில் பொறுக்க முடியாத வயிற்றுவலி, மாதவிடாய் அளவுக்கு குறைந்தும் அல்லது அதிகப்பட்டும் போதல் வயற்றில் கட்டி மாதம் பலமுறை மாதவிடாய் காணுதல் அல்லது பல மாதங்கள் ஆகாதிருத்தல் சிறுமிகள் பருவமாகாது பல ஆண்டுகள் வரை நின்றுவிடல் இவைகளும் கர்ப்பப்பையின் அறுவகை ரோகங்களும் 3-நாள் மருந்தில் நீங்கி மூன்று மாதத்தில் கர்ப்பம் உண்டாகும்.

(2) ஆண்களுக்கு:— அதிக போகத்தினால் உண்டாகும் நீர் கடுப்பு வெள்ளை, மஞ்சள் வெள்ளை, ரணம், கிரந்தி, சரீராதியந்தம் குத்தல் வலி, இன்னும் ரோகஸ்திரீகளினாலுண்டாகும் பல வியாதிகளும் மூன்று நாள் மருந்தில் பூர்ண சுகமுண்டாகும்.

3 அவுன்ஸ் எண்ணெ ரூ. 7. 1 சேர் அமிர்த சஞ்சீவி லேகியம் ரூ 15.

மேக ராஜாங்க மதன விந்தாதி லேகியம்.

இது 20 வகை மேகத்தையும், 8 வகை குன்மம், 21 வகை வாய்வு 40 வகை பித்தம், ஸ்திரீகளுக்குள்ள ஆறுவகை கர்ப்பநோய்களை தீர்த்து நல்ல பசி தீபனத்தைக்கொடுத்து ஜீவாதார நரம்புகளை முறுக்கேற்றி, தாது விர்த்தியையும் ஆண்மையையும் உண்டாக்கும்.

48 நாள் லேகியம் 1 சேர் ரூ 5. 24 நாள் லேகியம் ரூ. 2—8, 12 நாள் லேகியம் ரூ. 1—4.

நீரழிவுக்கும், தாது புஷ்டிக்கும் அமிர்த சஞ்சீவி லேகியம்.

வங்கபஸ்பம், தங்கபஸ்பம் 108புடமான அப்ரேக செந்தூரம், பவளபஸ்பம். நீரழிவு, அந்தரதாகம், மலசிக்கல், அல்லை, நீர்ப்பாண்டு சரீரத்தை வாட்டியாக்கக் கூடிய அஸ்திமேகம், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தைக் குறைத்து தேக வெளுப்பை மாற்றும் தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே இல்லை. பால்ய பருவமடைய விரும்பும் விருத்தர்களுக்கு அருமையான மருந்து. கிழத்தனத்தை நீக்கி வல்லமை யடையச்செய்வதில் இதற்கு நிகரானது உலகில் கிடையாது. உலக சுகத்தை இஷ்டம்போல் அனுபவிக்கலாம். மருந்தின் பெயரைப் பாருங்கள். சாஸ்திர ரீதியாய் முறை தவறாமல்செய்தது. பாலர், பெண்கள் யாவரும் சாப்பிடலாம்.

48 நாள் சாப்பிடகூடிய லேகியம் ரூ. 15—0—0

12 நாள் அப்ரேக் செந்தூரம்	ரூ.	6	4	4
12 நாள் வங்கபஸ்பம்	ரூ.	8	0	0
தங்க பஸ்பம் 12 நாள்	ரூ.	6	4	0
பவள பஸ்பம் 12 நாள்	ரூ.	1	8	0

ஆக மொத்தம் ரூபாய் 17—0—0

சர்வ மேகங்களுக்கும் மகா ராஜாங்க சுகந்த பரிமளாதி ஸ்நானத்தைலம்.

ஆண், பெண் குழந்தைகள் வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவர 20 வகை மேகத்தையும், நீரழிவு, நீர் எரிச்சல், கண் எரிச்சல், கண் புகைச்சல், கைகால் எரிவு, கிரந்தி, கந்தாழைநாற்றம், அஸ்திஜுரம், வெட்டை, மயக்கம், தலை பொடுகினால் மயிர் உதிர்தல் இதுகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும். 24 அவுன்ஸ் புட்டி ரூ. 5—0—0,

12 அவுன்சு ரூ. 2—8—0, 6 அவுன்சு 1—4—0

ராமபாணக் குளிகை.

ஆண்களுக்கு:—நீரடைப்பு கல்லடைப்பு, மலஜலக்கட்டினால் பிராணாவஸ்தைப்படும் சமயமும் வயற்றில் நரம்பு பிடித்து நிமிரமுடியாதிருத்தல், அண்டவாயு விரை வீக்கம் விரைகுத்தல் வலி இவைகளின் வாதையால் தற்கொலை செய்யத் துணியும் வியாதியஸ்தருக்கு ஓர் குளிகை சுகப்படுத்தும்.

பெண்களுக்கு:—கர்ப காலத்தில் மலஜல மிறங்காது துன்பம் இடுப்புவலி கணுக்களில் வலி, 5, 7, 9வது மாதங்களில் அனுபானப்படி ஒரு குளிகை சாப்பிட்டுவர கர்பப்பை ரோகங்களை நீக்கி சிசுவுக்கு ஆரோக்கியத்தைக் கொடுத்து சுகப் பிரசவம் ஆகும். 5 குளிகை ரூ 2—8—0

குரு ஜுரஹரி மாத்திரை.

மலேரியா என்னும் குளிர் ஜுரத்தை ஆயுள் பூராவும் வாராமல் தீர்க்கும் மூன்றும் முறை ஜுரம், நாலா முறை ஜுரம் இதுகளை வேருடன் நீக்கும். குணமாகாதவரை பணம் திருப்பி அனுப்பிவிடுகிறோம்.

6 வேளை மாத்திரையும் 9 வேளை கஷாய மருந்தும் சேர்ந்து ரூ. 5—0—0

(Dentone) டென்டோன் என்னும் பல்பொடி.

சிறந்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்டது. பற்களில் உண்டா விஷ நீர், இரத்தம் விழுதல் சீழ் வடிதல், சொத்தை வலி, ஈர்களில் ஏற்படும் புண் இவைகளை உடனே சுகப்படுத்தும். டப்பி 1க்கு 0—2—6, டஜன் 1 க்கு ரூ 1—8—0. குரோஸ் 1 க்கு ரூ. 18—0—0.

மேல் கண்ட அவுஷதங்கள் ஆறு தலைமுறையாயும் என் 36 வருஷ அனுபவத்தில் நடந்தேறி வருகிறது ஆகையால் இதைப்பற்றி அதிகம் விமர்சையாய் கூறவில்லை. இந்த அவுஷதங்களால் குணமில்லை யென்று நிரூபிக்கிறவர்களுக்கு பணம் வாபீசு செய்கிறோம். உபயோகிக்கும் முறையும் அனுபானமும் மருந்துடன் வரும் இன்னும் விபரங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் 1 அணா தபால் அனுப்பவும், வியாதியஸ்தரிடமிருந்துவரும் கடிதங்கள் ரகசியமாய் வைக்கப்படும்.

நற்சாக்ஷியைக் கவனியுங்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் சி. எஸ் ரத்னசபாபதி முதலியார் அவர்கள் முனிசிபல் சேர்மன் டிஸ்டிரிக்ட்டு போர்டு பிரசிடெண்ட் கோயமுத்தூர்.

,, ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். வக்கீல் எம். எல். ஏ. கோயமுத்தூர்.

ஸ்ரீ நமச்சிவாயகுரு தமிழ்சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, 14-106 பெரிய கடைவீதி, கோயமுத்தூர்.

பிதிர்களும் பிதிர் தேவதையும்.

(கைவல்ய சுவாமியார் எழுதுகிறார்.)

"ஊக்கமுளதேல் சிறியவர் உரையும் மேற்கொள்க;" என்பது பெரியவர்கள் கூறும் நியாயமாகும். எது சரி? எது தப்பு? என்னும் ஆலோசனையின் நிச்சய புத்தியில் பட்டதை தைரியமாகச் செய்கிறவனுக்கு புத்திமானென்று பெயர். பழய வழக்கத்தின் பயமோ, சுற்றியிருக்கும் அறிவிலாதவர்களின் சொல்லில் தாட்சணியமோ, வழக்கத்தில் தோய்ந்த மனதைச் சரிப்படுத்தும் திடமிலா கோழைத்தனமோ, நாம் உடைத்தாயிருப்பதினாற்றான் அறிவாளிகள் நம்மை, "நிச்சய புத்தியின் வழி தூர்ந்தவர்கள்" என்று சொல்லுகிறார்கள். மேனாட்டு ராஜதந்திரிகளும் நம்மை திறமையில்லாதவர்களென்று சொல்லுதற்கிடமுமிதுவே. "குடி அரசு" இடமில்லை என்று சொல்லுவதால் பிதிர் கடமைகளில், கருமாந்திரம், பிண்டம் போடுவதை விட்டுவிட்டு, சிரார்த்தத்தை மட்டுமெழுதுகிறேன். சிரார்த்தமென்பது சிரத்தையோடு செய்வது; சிரார்த்தம், திதி, வீட்டுச்சாமி கும்பிடுவது, திவசம், கூரைக்குச்சோறு போடுவது, பெரியோர்களுக்குப் படைப்பு, வருஷாந்திரம், இவையனைத்தும் ஒரு பொருட் சொற்கள். இறந்து போனவர்களுடைய இறந்த வருடக்கடைசியில் இறந்த மாதமும், திதியும் வரும் நாளில், ஒன்றோ மூன்றோ இருபத்தேழோ, ஒற்றை எண்ணுடைய பார்ப்பனரைக் கூட்டி இலையில் அரிசி உப்பு முதல் எல்லாச் சாமான்களும் நிரப்பி, புரோகிதனால் ஓமம் வளர்க்கச் செய்து, பிண்டமமைத்து அவனுக்கும் நமக்குந்தெரியாதனவும், நிச்சயமில்லாதனவுமானவைகளைச்சடங்கெனநடத்திக் காண்பித்து, வேஷ்டி செம்பு, துடை, விசிறி தெட்சணை வாங்கி பத்திர படுத்தி விட்டு, தெட்சணைத் தகராறு. சாமான்கள் சரி சரியில்லை என்னும் வாதமும், முகக் கடுகடுப்பும் அலட்சியமும், அரை குறைச் சமாதானமுமாகச் சிரார்த்தம் முடிகிறது, அதற்குச் சொல்லும் மந்திரங்களாவன, நதிகள் பேரும், தேசத்தின் பேரும், சொல்லி, சமித்தால் அக்கினி மூட்டப்பட்டிருக்கிறது, நெய் ஊற்றுகிறேன். அக்கினி எரிகிறது, எல்லாச் சமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. தெக்ஷிணை வைத்தாய் விட்டது, தர்ப்பை பிடித்த கையால் எள்ளையும், தண்ணீரையுமிறைக்கிறேன். இதனால் பிதிர் தேவதைகள் திருப்தியடைக என்பவைகளே. சம்ஸ்கிருத பாஷையில் சொல்லுவதால் உங்களுக்கு, அர்த்தமாவதில்லை. தகப்பனுக்குச் சிரார்த்தஞ் செய்கையில் உயிரோடு இருக்கும் தாயார் பேரைச் சேர்த்தும் தாயாருக்குச் சிரார்த்தஞ் செய்கையில் உயிரோடிருக்குந் தகப்பன் பேரைச் சேர்த்தும் சொல்லி விடுகிறான். தடுக்கப்பட்டால் ஆ! ஆகா!! அப்படியா!!! என்று திருத்திக் கொள்ளுகிறான். என் உயிரோடு இருப்பவர்களுக்குச் சிரார்த்தம் செய்து விடுகிறான் என்பது, உங்களுக்குத் தெரியுமா? தெரியாது. உங்களைக் கீழானவர்களென்றும், மந்திரத்தின் அர்த்தம் தெரியாதவர்களென்றும் அநேக நாளாக அவன் நினைத்து அவன் இரத்தத்திலேயே ஊறிப்போன அலட்சியமே. உங்களிடம் உடம்பைக் குறுக்கிப் பல்லைக் காட்டுவதெல்லாம் பணத்திற்கு. மந்திரத்தை நாம் கேட்கப்படாதென்றும், அவர்கள் சொல்லப்படாதென்றும் சொல்லப்படுகிறது. மந்திரத்தின் அர்த்தந் தெரியாமல் கர்மங்கள் செய்தால் பலனில்லையென்பதும் அவர்கள் தான் சொல்லுகிறார்கள். பின்னையேன் நம்மால், சொல்லக்கூடாத, தெரியப்படாத, நமக்குத்தெரியாதபாஷையில் சொல்லவேண்டும்? நம்பாஷையில் சொன்னால் காரியம் பிதிர் தேவதைக்குப் போய்ச் சேராதா? நம் பாஷை தெரியாத தேவதைக்கும் நமக்கும் சம்பந்தமென்ன? கங்கை, யமுனை, பரதகண்டம், பாரத வருடம், பிண்டம் தெக்ஷிணை, ஓமம், எல்லா வைத்திருக்கிறது என்பனதான் சிரார்த்தத்தின் மந்திரம். அவரவர்கள் தெரிந்த பாஷையில் சொல்லிவிட்டால் புரோகிதப் புரட்டு வெளியாய்விடும் நமக்கும் பிதிர் தேவதைக்கும் புரோகிதனுக்கும் மேலான கடவுளுக்குமுள்ள சம்பந்தம் வெளியாய்விடும். நம் ராஜா அன்னிய பாஷை உடையவராக இருந்தாலும் ஸ்தல ஸ்தாபனங்களிலாவது அவரவர் பாஷைகளை உபயோகித்துக்கொண்டு வருகிறோம். அன்னிய பாஷைப் பேய் சுடுகாட்டு மந்திரத்தில் கூட சுதந்தரம் கொடுக்க மாட்டேனென்கிறது. பிராமணனும் திதி செய்கிறானே இதில் என்ன புரட்டென்றால் அந்தக் காலத்து பிராமணன் பங்களாவி லிருந்ததில்லை. காரணஞ் சொல்லித்தான் பிச்சை கேட்க வேண்டும். சாமான் சேகரம் பண்ண திதி ஒரு நல்ல மார்க்கம். நாம் செய்யும் திதியை பிதிர் தேவதை ஏற்று பிதிர்களுக்கு கொடுக்கிறது என்று சொல்லுகிறார்கள். சிரார்த்தத்திற்கு மது மாம்சம் முக்கியம் வேண்டுமென்பது சிரார்த்த கர்மங்களின் விதி. ஆடு மாடுகளை வெட்டி சிரார்த்தம் செய்வது புத்தருடைய காலத்திற்குப்பின் சிறுகச் சிறுக நின்றுவிட்டது. மாட்டைப்பற்றி உங்களுக்குச் சந்தேகமிருக்கலாம். யாகப் பசு வென்பதற்கு வெள்ளாடு என்று அர்த்தமிப்பொழுது சொல்லப்பட்டாலும் பசு என்பது எல்லாருக்குந் தெரிந்த அர்த்தம் பெட்டைமாடு. சிரார்த்தமேற்பட்ட காலத்து சாமக் கிரியைகளில் முக்கியமானவை மது, மாம்சம். இப்பொழுது அப்படியில்லை. முன்னால் ஏற்பட்ட பிதிர் தேவதைக்கு இப்பொழுது செய்யும் சிரார்த்தம் எப்படி திருப்தியைக் கொடுக்கும்? மனிதன் சீர்திருத்தம போல் பிதிர் தேவதையும் மாறி யிருக்குமா? இருக்க நியாயமில்லை. ஒரு சதுர்யுகம் கொண்டது தேவர்கட்கு ஒரு நாள் இப்பொழுது கலியுகத்திற்கு வயது 5000 வருடம், கணக்குப் போட்டுப் பார்த்தால் சிரார்த்தத்தை ஏற்றுக் கொள்ளும் பிதிர் தேவதை பட்டத்திற்கு வந்து தேவ வருடத்தில் இரண்டு நிமிடங் கூட ஆகவில்லை. இரண்டு நிமிஷத்திற்குள்ளவா, கடவுள் தேவதையை மாற்றி இருப்பார்? இதை உத்தேசிக்கையில் நாம் இப்பொழுது செய்யும் சிரார்த்த கர்மங்கள் பிதிர் தேவதைக்குத் திருப்தியை உண்டு பண்ணாது. புரோகிதன் சிரார்த்த வீட்டில் அன்று, எல்லாவித ஆகாரங்களையும் சாப்பிட்டுத் திருப்தியடைய வேண்டுமென்பது முக்கிய விதிகளிலொன்று. புரோகிதர்கள் சாப்பிடுவதில்லை. எல்லாவித சாமான்களையும் வீட்டில் சமைத்து சாப்பிடுவதாக அவர்கள் பாவனை செய்து நாமும் சம்மதித்து அனுப்புகிறோம். ஒரு வீட்டுத் திதியாயிருந்தால் பரவாயில்லை. ஒன்பது வீட்டு இழவையுந்தொலைத்துக் கொடுக்குஞ் சாமான்களை வாங்கி இஷ்டமான வீடெல்லாம் கொடுத்தும் விற்றும் பாழ் பண்ணாமல் தீருமா?

இப்பட்டோடு நம் சிரார்த்தம் தீருவதில்லை. பூர்வீக நம் வழக்கப் பிரகாரம் பந்து சிநேகிதர்களைக் கூப்பிட்டு வீடு மெழுகிக் குத்துவிளக் கேற்றி முன்னவர்கள் கட்டியிருந்த பட்டோ வேஷ்டியோ புதிது வாங்கியோ வைத்துப் படைப்புப் போட்டு சாமி கும்பிட்டு பிதிர்களை நினைத்துச் சிநேகிதர் பந்து முதல் எல்லாருமுண்டு சந்தோஷப்படுகிறோம். பண்டைக் காலத்துத் தமிழ் மக்களுள் ஒருபகுதியாரான கொங்கு வேளாளர்கள் வருடத்திற்கொருநாள் பந்து சிநேகிதர்களைக் கூப்பிட்டு வேஷ்டி துணி வைத்து படைப்புப் போட்டு சாமி கும்பிட்டு கூரையில் காகத்திற்குச் சாதமிட்டு எல்லாருமுண்டு ஏழைகளுக்குங் கொடுத்து சந்தோஷப்படுகிறார்கள். கூரைக்குச் சோறுபோடுவதென்றால் பிதிர்களைப் பக்தி விஸ்வாசத்துடன் கும்பிடுவதென்றருத்தம். இவர்களில் சில பணக்காரர்கள் பக்கத்துத் தோட்டத்துக் காய்கறி தேங்காய் தயிர் நெய் முதலியவைகளை ஏராளமாகக் கொண்டுவந்து சிரார்த்தஞ் செய்கிறார்கள். பார்ப்பனரின் கூட்டுறவாலும் உபதேசத்தாலுமே ஒழிய அர்த்தம் தெரிந்தல்ல கொங்கு 24-நாட்டு வேளாளக் குடும்பங்களுக்கும் பார்ப்பன புரோகிதன் கிடையாது. ஒக்கிலிய கவுண்டர்களும் முன் சொன்னவர்கள் மாதிரியே வீட்டுச்சாமி கும்பிட்டு ஏழை முதல் எல்லாருமுண்டு, சந்தோஷம் திருப்திப்படுகிறார்கள். இவர்கட்கும் பார்ப்பன புரோகிதன் கிடையாது. இவர்கள் பிதிர்களுக்கு சொர்க்கமில்லையா? இவை நிற்கட்டும் இதன் ரகசியத்தை ஆராய்வோம்.

நம்பிதிர்கள் ஒன்றோ நரகத்தில் அல்லது சொர்க்கத்தில் அல்லது மறு ஜென்மத்தில் அல்லது உலோகாயுதமதஞ் சொல்லுவது போல் பூதத்தோடு பூதமாகக் கலந்திருக்க வேண்டும். நரகத்திலிருப்பவனுக்கு இந்த அரிசியும், பருப்பும் தெக்ஷிணையும் போய்ச் சேருவது எங்ஙனம்? காமதேனு, கற்பக விருக்ஷம், முதலியவையிருக்கும் சுவர்க்கத்திலிருப்பவனுக்கு இந்த எள்ளுந் தண்ணீருமெதற்கு? மறுஜென்ம மெடுத்தவனுக்கு இந்தக் கர்மத்தால் என்ன பலன், பூதத்தோடு பூதமாக கலந்தவனுக்கு எதுவும் வேண்டியதில்லை. பின் எதற்காகப் பார்ப்பானுக்குக் கொடுக்க வேண்டுமென்கிற கேள்விக்குச் சரியான பதில் வேண்டும். பிதிர்களைச் சும்மா விட்டு விடலாமா? விட வேண்டாம். நமது பெரியவர்கள் நமக்கு

பிராமணன் என்பான் யார்?

(குடந்தை நாதன் எழுதுகிறார்:)

பிராமணன் வேத முதல் ஸ்மிருதியீறுக வுள்ளவற்றால் "முதலோன்" என்று கூறியதன் கருத்து யாது. அப்படி யுரைக்கப்படுதல் உயிர்பற்றியா, உடல் பற்றியா, குலம் பற்றியா, அறிவு பற்றியா, வினைபற்றியா, அறம் பற்றியா, மற்று யாதுபற்றி என்பதை யாராய்வோம்.

அன்பர்களே! எல்லாவுடல்களிலும் இருப்பது உயிர் ஒன்றே. இன்றைக்கிருக்கும் நமதுயிர் நாளை போகுமானால் அது போயுறுமுடல் வேறாயினும் உயிர் அந்த உயிர்தான். பார்ப்பனர்களுடைய உயிராயிருந்தாலுஞ் சரி, மற்று யாருயிராயிருந்தாலுஞ்சரி, அதைநாம்தனித்துப்பார்ப்பது துர்லபம். உயிர் போகுங்கால் பார்ப்பானுயிர் நம்முயிரைப் போலல்லாமல் வேறுவிதமாகச் செல்லுமேயானால் அவனுயிர் போகும் போது அவர் தம்முடல்களுக்கு யாதொரு விதமான துன்பமு மில்லாதிருக்குமேயாகில் பார்ப்பான் மேன்மை அவனதுயிரினால் என்னலாம். அஃதப்படியில்லை யென்று நாம் கண்கூடாகக்காண்கிறோமாதலால் பிராமணன் என்பான்யிரினாலாகான். அஃதன்றி உடலினாலும் அல்ல. ஏனெனில்பார்ப்பனர் உடலெல்லாம் ஒரே மாதிரியாகவும் ஏனையோரினுடலெல்லாம் வேறு விதமாகவும் இல்லை. அங்கங்கள் அமைந்திருப்பன யாவும் ஒருதன்மைத்தே. பார்ப்பனரிலே அனேகர் வெண்ணிறமாகவும் செந்நிறமாகவும் கரு நிறமாகவுமிருக்கிறார்கள். அப்படியே மற்ற எல்லா வகையிலு மாதலால் பிராமணன் என்பது நிறத்தினாலன்று. அவர்களுடல்கள் எந்நிறத்தவையாயிருந்தாலுஞ் சரி, இறுதியில் நம்முடல்களைப் போலவே அவைகளும் தீக்கிரை ஆகின்றன. இன்றேல் மண்ணொடு மடிகின்றன. ஆதலால் உடலினால் பிராமணன் ஆகான்.

நம் பார்ப்பனர்கள் "பிராமணன் என்பது ஜாதியினால் எங்களப்பன் பிராமணன் நானுமதனால் பிராமணன்" என்பார்கள். அதனை நம்முள் அனேகர் நம்பியும் நம்பும்படி வற்புறுத்தப்பட்டு மிருக்கின்றார்கள். என்னே வியப்பு! தகப்பன் நியாயாதிபதியா யிருந்தால் பிள்ளையும் நியாயாதிபதியா அன்றி தகப்பன் நியாயவாதியாயிருந்தால் பிள்ளை நியாயவாதியென்று சொல்லி நீதிஸ்தலத்திலே கட்சியாட யாராணுமதிப்பார்கள்? ஒருவன் வயிற்றில் பிறந்ததனால் வருவதல்ல பிராமணத்துவம். வியாசமுனி பிறந்ததொரு செம்படச்சிக்கு; வசிட்டர் பிறந்த தொரு கூத்திக்கு; நாரதர் பிறந்த தொரு வண்ணாத்திக்கு; சத்தியர் பிறந்த தொரு சண்டாளிக்கு; ஆகிலும் இவர்களெல்லாம் அக்காலத்திலே பெருமைபெற்ற அந்தணராய் விளங்கினார்கள். ஆதலால் "நாங்களே குலத்தில் பெரியோம்" என்றுபிதற்றி நாத்தழும் பேறும் நண்பர்களை நன்கு நசுக்குங்கள். ஏனெனில் உண்மையின்றிப் பிற வுரைப்பாரை அவ்வாறு செய்யாது விடல் பெரியதோர் பாவம்.

ஒருவனுக் கறிவிருந்ததனாலேயே அவன் பிராமணனாகான். ஏனெனில் எல்லா ஜாதியாரிலும் அறிவுடையா ரிருந்தனர். இன்னும் இருக்கின்றனர். தரும வியாதன் என்ற ஒரு வேடன் முற்காலத்திலே பிராமணனுக்கு ஞானோபதேசம் செய்திருக்கின்றான். க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த சனகர் பலர்க்கு ஞானமூதூட்டினார். பார்ப்பாரல்லாத எத்தனை நாயன்மார்கள் எத்தனை யாழ்வார்கள் அறிவினாலந்தமிலின்பத் தழிவில் வீடெய்தி யிருக்கிறார்கள். ஆதலால் அறிவுடைய தெல்லாம் பிராமண மன்று. அன்றி, பிராமண னென்பது வினையினாலுமன்று. நல்வினை, தீவினை யிரண்டும் யாவர்க்கும் ஒன்றே. யார் யார் எந்த வினையைச் செய்கிறாரோ அவரவர் அடைவர்தவினையின் பலனை. "பார்ப்பான் செய்தால் பாவமல்ல நாஞ் செய்தால் தான் பாவம்" என்ற குருட்டு நம்பிக்கை யுடையார் சிலருண்டு. அவர் அப்படி நினைப்பதை யுன்னி நாம் வருந்தவேண்டி யிருக்கிறது. ஏனெனில் பாவமோ குற்றமோ யாரால் செய்யப்படினுஞ் சரி அஃததுவே. முன்னொருகால் சிவபிரான் தம்மெதிர் நின்று வினவும் போதும் நக்கீரர் கூறியது யாதெனில் "நெற்றிக் கண்ணைக் காட்டினுங் குற்றம் குற்றமே" என்பது. ஆதலால் வினையினால் வருவதன்று பிராமணத்துவம்

சிலர் "தருமவான் பிராமணன்" என்பார்கள் அஃதுமின்று. ஏனெனில், கண்ணன், சிசுபாலன், அரிச்சந்திரன், பாரி முதலிய அரசு வள்ளல்களிருக்க பிராமணன் அறத்தினா லென்பதாகாது.

பின்னும் நூலைப்போட்டுக் கொண்டதனாலேயே ஒருவன் பிராமணன் ஆகான். விசுவகுலத்தவரும், வைசியருட் பலரும், சேணியருட் சிலரும் வள்ளுவ பண்டாரங்களில் பலரும் நாமும் (தாய் தந்தையர்குக் கருமஞ் செய்யுங் காலங்களில்) நூலை அணிகின்றோம். ஆதலால் பூணூலினாலன்று பிராமணனாதல். ஆனாலிவரெல்லாமன்றி யார் பிராமணர் என்றால், உண்ணல், குடித்தல், மகிழ்தல், வருந்தல், சாதல், பிறத்தல், வளர்தல், தேய்தல், முதலிய தொழில் தனக்காக இல்லாதவன் எவனோ, அறிவின்பவடிவமாய் நிர்விகல்பமின்றி இருக்கின்றவன் எவனோ, எல்லா வுயிர்களுள்ளும் இருந்து உண்மை உணர்த்துபவன் எவனோ, நமதுயிரைத் தனது கண்ணால் பார்க்கக் கூடியவன் எவனோ, காமம், விருப்பம், பொறாமை, வேட்கை, ஆசை, மயக்கம், செருக்கு முதலிய வகற்றியவனெவனோ அவனே பிராமணன் என்பது தான் வேதாகம புராண இதிகாசங்களின் துணிபு. நம் பார்ப்பன சகோதரர் இவ்வளவுமுடையவன் எவனோ அவன் தம்முள்ளிருத்தலால் அவர்கள் தாம் பிராமணரென்று கூறுவாராயின் அத்தகைய ஒருவர் அந்தர்யாமி யாதலால் நம்முள்ளு மிருக்கின்றார் என்பதை யறிவுறுத்தி அவர்களை நம்மையும் பிராமணர்க ளென்றுரைக்குமாறு கூற வேண்டியதவசியம்.

"சத்திய மின்றித் தனி ஞானந்தானின்றி
ஒத்தவிடயம் விட்டோரு முணர் வின்றிப்
பத்தியு மின்றிப் பரனுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே"
என்றார் பெரியாரும்.

ஆதலாலினியாகிலும் நம் சகோதரர்கள் பார்ப்பானைப் பிராமண னென்றும், சுவாமியென்று மழையாது, அவரது பட்டப் பெயராகிய அய்யரே என்று அழைக்கும்படிக்கும் கேட்டுக் கொள்ளுகிறேன். நம்முன்னோர் "உண்மை பிராமணனுக்குக் கொடு" என்றது பார்ப்பானுக்கல்ல. மனிதன் ஒவ்வொருவனுள்ளு மிருக்கும் பிராமணனுக்கு அவனது அன்பர்கள் வழியா யளிப்பாய் என்றதோர் கருத்து பற்றியேயாம். நமது வீட்டுக் குழந்தைகளுக்கு கற்கண்டோ பட்சணமோ வாங்கிவந்து கொடுத்தவரிடத்து நமக்குச்சிறிது பற்றுண்டாவது போல "எளியவர்க்கீய இறைவனும் ஏற்பான்" எளியவர் பார்ப்பனரிலே மட்டும் அன்றி எல்லா வகுப்பிலு மிருக்கிறார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் அவரவர் வகுப்பினர்க்கே தான முதலியவைகளைத் தருவாராக.

ஏற்படுத்தி விட்டு போனதும் பழய வழக்கமானதுமான படைப்புப் போட்டு வீட்டுச் சாமி கும்பிட்டு உண்டுடுத்தித் திருப்திப் படுவதே நாம் செய்யும்பிதிர் கடமை; பார்ப்பான் மத்தியில் வேண்டாம். தன் காரியமே பிராதானமென நினைக்கும் சுபாவமுடைய ஒரு ஜன சமூகம் நம் தேசத்தை அநேக நாளாக அடிமேலடியடித்துக்கீழேதள்ளி மதத்தின் பேரால் அநேக கர்மங்களை விதித்துத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொண்டு வந்திருப்பதை நீங்கள் தெரிந்து கடவுளுக்கும் நமக்குமத்தியில் "துவிபாஷி" வேண்டியதில்லை. நமக்குள் ஒருவரையொருவர் இம்சை செய்வதற்கே முயற்சி செய்வதை விட்டு விட்டு வைதீகக்கொடுமையை ஒழிக்கத் தைரியமாய் முன் வாருங்கள். வந்து பாரமார்த்தீகம் வியாபகாரிகம், என்ற கொள்கையில் உட்பட்டு அடிமையாயிருக்கும் நம்மவர்களை அதனின்றும் நீக்குங்கள். வதற்காக வந்திருக்கும் "குடி அரசை" ஆதரியுங்கள். நீங்களெழுதுவதும் சொல்லுவதும் சரி. எங்கள் வீட்டு பெண்கள் ஒப்பமாட்டேனென்கிறார்கள் என்று பேசும் பெருமையை நிறுத்தி அவர்கள் பேரில் பழி சுமத்துவது நம் அறியாமை என்றுணர்ந்து பெண்களுடைய நல்ல உபதேசத்தில் நாம் எவ்வளவு கவனஞ் செலுத்தியிருக்கிறோமென்பதை மனதிற் கொண்டுவந்து நானென்ன ஆண்பிள்ளை யல்லவா? பெண்கள் பேச்சை கேட்பவனா என்று நினைத்துக்கொண்டிருப்பதை கொஞ்சமிந்தநியாயத்தில்விடுத்து உண்மைகளை அவர்கட்கு விபரமாக எடுத்துச் சொல்லுங்கள். பிதிர்களிருக்கிறார்களா இல்லையா எங்கிருக்கிறார்கள் என்பது யாருக்குந் தெரியாத ரகசியம். பிதிர்களுக்காக பார்ப்பனருக்குத் தானம் கொடுப்பது முட்டாள்தன மென்பதற்காகவே திருவாத்தான் பார்ப்பானுக்கு சூடு போட்ட கதையை அநேக நாளாய் இன்றுவரையிலும் சிறு வகுப்பிற்குப் பாடமாக வைத்துக்கொண்டு வருகிறார்கள். இந்த வருடமும் சிறு பெண்களுக்குப்பாடமாக வைத்திருக்கிறார்கள்.

பணக்கால் ராஜாவின் உளறலா? பார்ப்பனர்களின் போக்கிரித்தனமா?

(மித்திரனின் விஷமம்.)

தென் ஆப்ரிகாவில் இருந்து வந்த தூதர்களுக்கு சென்னை மந்திரிகள் ஒரு விருந்து நடத்தி இருக்கிறார்கள். அவ்விருந்தில் அத்தூதர்களை பணக்கால் ராஜா பாராட்டிப் பேசுகையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஏற்பட்ட பல நன்மைகளைப் பற்றியும், தென்னாப்பிரிகா போன்ற பல குடியேற்றநாட்டின் சம்பந்தத்தைப் பற்றியும், சில வார்த்தைகளும் சொல்லிவிட்டு, இந்தியாவிலிருக்கும் சில பண்டைக்கால நாகரிகத்தின் வேறுபாடுகளுக்காக எங்களைத் தாழ்வாய் கருதக்கூடாது தற்கால சமூக சம்பிரதாயங்களுக்கு அதுகள் பிடிக்காமல் இருப்பது வாஸ்தவம்தான். ஆனால் அவை துரிதமாக மறைந்து வருகிறது என்று சந்தோஷத்துடன் தெரிவிக்கிறேன் என்று பேசியிருக்கிறார். (இது சுதேசமித்திரனிலேயே இருக்கிறது) இந்த வார்த்தைகளுக்காக மித்திரன் "பணக்கால் ராஜாவின் உளறல்" என்று போக்கிரித்தனமான தலையங்கமிட்டு இதை குறிப்பிடுருப்பதுடன் "தேசாபிமானமற்ற மந்திரி" என்கிற தலையங்கம் கொண்ட வியாசமும் எழுதியிருக்கிறான். அதோடு தென்னாப்பிரிக்காவில் உள்ள தங்கள் கோவில்களில் "நாய்களும் கருப்பு மனிதர்களும் உள்ளே வரக்கூடாது" என்று விளம்பரம் எழுதி ஒட்டி இருப்பதற்காக மிகவும் வருந்துவதாக நீலிக்கண்ணீர்விட்டு இந்த காரணங்களால் குடியேற்ற நாட்டு சம்பந்தத்தால் இந்தியா கௌரவக் குறைவை அடைந்திருக்கிறது என்றும் எழுதியிருக்கிறான். திரும்பவும் இந்தியாவில் இருக்கும் பல கெடுதலான நாகரீகத்திற்கும் சமாதானமாக இங்கிலாந்தில் எல்லோரும் மிதமாய்க் குடிக்கிறார்களாதலால் அந்த நாகரிகத்திற்கும் இந்த நாகரீகத்திற்கும் சரியாய் போய்விட்டதென்றும் கொஞ்சமும் வெட்கமில்லாமல் எழுதுகிறான். இன்னும் இது போல் பலதுகள் எழுதிவிட்டு பணக்கால் ராஜா தம்மை வெகு ஜனப் பிரதிநிதி என்று சொல்லிக்கொண்டது தப்பிதம் என்றும் இனி அப்படிச் சொல்லிக் கொள்ளச் செய்யாமல் செய்து விட வேண்டும் என்றும் எழுதி முடித்திருக்கிறான். இதில் எவ்வளவு அயோக்கியத்தனமும், ஆணவமும் இழிகுணமும் இருக்கிறதென்பதை வாசகர்கள் நன்றாய் கவனிக்க வேண்டும். நமது மக்களின் அறியாமையால் தங்களுடைய பத்திரிகை பாமரமக்களை ஏமாற்றத்தக்கதாக இருக்கிறது என்கிற ஒரு காரணத்தினாலேயே நமது பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாராகிய நம்மை அடியோடு அழுத்துவதற்கு என்ன என்ன சூழ்ச்சிகள் செய்கிறார்கள் என்பதை இதிலிருந்தே அறிந்து கொள்ளலாம். இந்தியாவுக்குப் பார்ப்பனர் கொடுமையில் ஏற்பட்ட "நாகரீகத்தை" கனம் பணக்கால் ராஜா எடுத்துச்சொல்லாவிட்டால் தென் ஆப்பிரிக்கா வெள்ளைக்காரருக்கு தெரியாமல் போகும் என்று "மித்திரன்" நினைத்து கொண்டு ஆத்திரப்பட்டிருக்கின்றான் போலும். இது எவ்வளவு அறிவீனம்? ஐரோப்பாவில் குளிருக்காகவும் ஜீரணசக்திக்காகவும் சிறு அளவாகக் குடிக்கும் சாராயத்திற்கும் நமது நாட்டு நாகரீகத்திற்கும் ஒப்பிட்டிருப்பது எவ்வளவு மோசமானது என்பது நாம் சொல்லாவிட்டாலும் வாசகர்களுக்கு விளங்காமல் போகாது. இந்த நாட்டுக்குப் பிச்சை எடுக்க வந்த ஒரு கூட்டத்தார் தங்களை பிராமணர்கள் என்றும் உயர்ந்த ஜாதியார் என்றும் லோக குரு என்றும் மகந்துகள் என்றும் ஆச்சாரியார்கள் என்றும் இந்நாட்டு வாசிகளை ஏமாற்றித் தங்கள் கால்களைக் கழுவின தண்ணீரை வெள்ளியும் தங்கமும் கொடுத்து வாங்கிக் குடித்தால் மோட்ச வீடு திறக்கப்படுமென்று ஏமாற்றும் அயோக்கியத்தனம் ஐரோப்பாவில் குளிருக்காகவும் ஜீரண சக்திக்காகவும் என்று அந்த நாட்டுச் சீதோஷண ஸ்திதியை அநுசரித்து சிறு அளவாகக் குடிக்கும் சாராயத்திற்கு ஒப்பு ஆகுமா? இந்நாட்டுப் பார்ப்பனர் தாங்கள் எவ்வளவு அயோக்கியர்களாக இருந்தாலும், மூடர்களாக இருந்தாலும், தாங்கள் ஒரு வகுப்பில் பிறந்து விட்ட காரணத்தினாலேயே தங்களை உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக் கொண்டும், மகாத்மாவானாலும் எவ்வளவு யோக்கியர்களானாலும் தர்ம ஸ்ரேஷ்டர்களானாலும், தியாகிகளானாலும், ஒரு வகுப்பில் பிறந்தார்கள் என்கிற காரணத்திற்கு ஆகவே சூத்திரன், வேசிமகன், அடிமை, என்று கூப்பிடும் அக்கிரமத்திற்கும் ஐரோப்பியர்கள் சிறு அளவாய்க் குடிக்கும் சாராயத்திற்கும் ஒப்பாய் விடுமா? தவிர தென்னாப்பிரிக்கா கோவிலில் நாய்களும் கருப்பு மனிதர்களும் போகக்கூடாது என்று போர்டுகள் போட்டதினாலேயே கருப்பு மனிதருக்கு அவமானம் வந்துவிட்டதாகவும் இதினாலேயே இப்படிப்பட்ட குடியேற்ற நாட்டு சம்பந்தத்தை பணக்கால் ராஜா வெறுக்காதது தேசாபிமானமற்றது என்றும், எழுதியிருக்கிறான். வெள்ளையர்கள் தங்கள் சொந்தக் கோவிலில் நாய்களையும் கருப்பு மனிதரையும் விடாததற்காக அவர்களை வெறுக்க வேண்டுமானால் நமது பார்ப்பனர் நமது பணத்தைச் செலவு செய்து போடப்பட்ட நமது ரோட்டில் நாயும் பன்றியும் கழுதையும், மலமும் மூத்திரச் சட்டியும் போகலாம் ஆனால் இந்நாட்டு மக்கள் நடக்கக்கூடாது என்று சொல்லுபவர்களை என்ன செய்ய வேண்டுமென்று கேட்கிறோம்?

பூனை, செத்துப் புழுத்த எலியைத் தூக்கிக்கொண்டு புழு கீழே உதிர உதிர உள்ளே போகலாம், பார்ப்பனர் குஷ்டரோகியானாலும் விபசாரி வீட்டு மாமாவானாலும் கோவிலுக்குள் திருடவும், புரட்டுப் பண்ணவும் சுவாமி சொத்தைக் கொள்ளையடிக்கவும் சுவாமி இடம் போகலாம் சுவாமியைத் தொடலாம். ஆனால் நமது பணத்தைச் செலவு செய்து கட்டிய கோவிலுக்குள் நாம் மாத்திரம் பக்தியோடு பரிசுத்தத் தன்மையோடு சுவாமியைக் கும்பிடக்கூட சுவாமிபக்கத்தில் போகக்கூடாது என்றால் இவர்களை என்ன செய்ய வேண்டும்? தங்கள் பெண்கள் எல்லாம் பிராமண ஸ்திரீகள்; நமது பெண்களை எவ்வளவு பதிவிரதைகளானாலும் சூத்திரச்சிகள் என்று ஒரு கூட்டத்தார் சொல்லுவதானால் அவர்களை என்ன செய்ய வேண்டும்? இம்மாதிரி கொடுமை செய்பவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு அவர்களோடு உறவாடிக் கொண்டும் அவர்களை வணங்கிக் கொண்டும் மலையாளம் முதலிய இடங்களில் அவர்களுக்கு நமது ஸ்திரீகளை அனுபவத்திற்கு விட்டுக் கொண்டும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் மித்திரனுக்கு தென்னாப்பிரிக்கா தூதுவர்களை வரவேற்கையில் அவர்களைப் புகழ்ந்து பேசிய நமது பணக்கால் ராஜாவின் பேச்சுக்கள் தேசாபிமான மற்றதாகிவிட்டதென்றால் இம்மித்திரன் கூட்டத்தாரோடு உறவாடிக்கொண்டும் அவர்கள் அக்கிரமங்களையும் அயோக்கியதனத்தையும் சகித்துக் கொண்டும், இருப்பவர்களுடைய செய்கை தேசத்துரோகம் ஆவதோடு இப்படிப்பட்ட பார்ப்பனர் சம்பந்தத்தால் இந்தியா சுயமரியாதை அற்றுக்கிடக்கிறதா இல்லையா என்று நமது பார்ப்பனரையும் மித்திரனையும் கேட்கிறோம். தவிர பணக்கால் ராஜா அவர்கள் இந்நாட்டு பிரதிநிதி என்று சொல்லுகிறார் என்றும் இனி அப்படிச் சொல்லிக் கொள்ளச் செய்யக்கூடாது என்றும் சொல்லுகிறான். இதிலிருந்து இதுவரை பணக்கால் ராஜாவை பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ள பொது ஜனங்கள் உரிமை கொடுத்திருக்கிறார்கள் என்பதை மித்திரன் ஒப்புக் கொள்ளுகிறான் என்பது வெளியாகிறது. ஆனால் இனிமேல் அவரைத்தள்ளிவிட வேண்டுமென்கிறான். அப்படியானால் மற்றபடி யாரை பொது ஜனங்களின் பிரதிநிதி என்று சொல்லவேண்டுமென்று மித்திரன் ஆசைப்படுகிறான் என்பது நமக்கு விளங்கவில்லை. நாயுடு நாயக்கர் முதலியோர் காங்கிரசைவிட்டு ஒழிந்ததால் காங்கிரஸ் பரிசுத்தமாய் விட்டது. என்றும் நாயக்கரையும் ஆரியாவையும் ஏன் இன்னமும் ஜெயிலில் பிடித்து அடைக்கவில்லை என்று சர்க்காரையும் பார்ப்பன உத்தியோகஸ்தரையும் கெஞ்சும் ஸ்ரீமான் அய்யங்காரையா? பார்ப்பனரல்லாதாரை ஒழிக்கவும் பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நாட்டவும் பணங்காசு செலவு செய்து பிரசாரம் செய்து மகாத்மா காங்கிரசின் யோக்கியதையையும் கெடுத்து தன்னை காங்கிரஸ் தலைவராக்கிக் கொண்ட ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரையா? ஒரு பிராமணக் குழந்தை சாப்பிடுவதை ஒரு பிராமணரல்லாத குழந்தை பார்த்து விட்டால் ஒரு மாதம் பட்டினி கிடப்பேன் என்று சொன்ன ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாரையா? சென்னை பார்ப்பனரல்லாத மகாநாட்டுக்கு தலைமை வகிக்க வந்த கனம் யாதவர் என்கிற பார்ப்பனரல்லாத பம்பாய் மந்திரியை ஏன் சிறையிலடைக்கக் கூடாது என்று கேட்ட ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சாஸ்திரிகளையா? மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்று சொன்னவுடன் காங்கிரஸ் கமிட்டியில் இருந்து ராஜீனாமா கொடுத்துத் தன்னுடைய இஷ்டர்களையும் ராஜீனாமா

கொடுக்கச் செய்து தொழிலாளர்கள் வயிற்றில் மண்ணைப் போட்டுக் கொண்டிருப்பவரும் கள்ளு உற்பத்தி செய்பவருமான பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க கிராமம் கிராமமாய் திரிந்த ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியரையா? கல்பாத்தி பொது தெருவில் யார் வேண்டுமானாலும் நடக்கலாம் என்று சட்ட சபைத் தீர்மானத்தின் பேரில் சர்க்கார் உத்திரவு போட்டிருந்தும் வேலையிருந்தால் தான் போகலாம் என்று வியாக்கியானம் செய்த சட்ட மெம்பர் ஸ்ரீமான் சி. பி. ராமசாமி அய்யர் அவர்களையா? மகாத்மாவை சிறையிலடைத்து ஆறு வருஷம் தண்டிப்பதற்கு உதவியாய் இருந்து சர்க்காருக்கு தைரியம் சொல்லி தன் மக்களுக்கு பெரிய பெரிய உத்தியோகம் சம்பாதித்துக் கொண்ட ஸ்ரீமான் மகா மகா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரிகளையா? ரௌலட் ஆக்டுக்கு கையொப்ப மிட்ட ஸ்ரீமான் குமாரசாமி சாஸ்திரிகளையா? சுதேசமித்திரன் பத்திரிகை ஒழுங்காயில்லை மகாத்மா காந்திக்கும் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கும் விரோதமாய் எழுதி வருகிறது, ஆதலால் காங்கிரசிலிருந்து பத்து ஆயிரம் ரூபாய் கொடுத்தால் பொதுவாகவும் சத்தியமாகவும் எழுதிவருகிறேம் என்று சொல்லிப் பொதுப் பணத்தில் இருந்து பத்து ஆயிரம் பெற்று "அவன் போனால் கலகமாகிவிடும் நான் போனால் செருப்பாலடித்துவிட்டு வருகிறேன் என்று ஒருவன் சொன்னானும் அதுபோல்" சுதேசமித்திரனைவிட கேவலமாய் பார்ப்பன ரல்லாதாருக்கு துரோகம் செய்துவரும் ஸ்ரீமான் பிரகாசம் அவர்களையா? சென்னை நகரப் பொது மக்கள் பிரதிநிதியாக இந்தியா சட்ட சபைக்குப் போய் அதன் பலனைப் படிக்காத தன் மக்களுக்கு எல்லாம் 400, 500 ரூபாய் சம்பளமுள்ள உத்தியோகங்களை சம்பாதித்துக் கொண்ட ஸ்ரீமான் டி. ரங்காச்சாரியார் அவர்களையா? பார்ப்பனரல்லாதாரை ஒழிப்பதற்கென்றே பார்ப்பனர் அல்லாதார் பணத்திலேயே பத்திரிகை நடத்தும்............

....

ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார் அவர்களையா? அல்லது வேறு அய்யர் அய்யங்கார், ஆச்சாரியார், சர்மா, சாஸ்திரியார் முதலியவர்களையா? என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரல்லாத மக்களின் ஒற்றுமையற்ற நிலையையும் தங்கள் பத்திரிகை பலத்தின் ஆணவத்தையும் பாமர ஜனங்களின் அறியாமையையும் அறிந்த பார்ப்பனர்கள் இவ்வளவு தான் சொல்லுவார்களா? இன்னமும் அதிகமாய்ச் சொல்லுவார்களா? என்பதைப்பற்றி நாம் யோசிக்கவே வேண்டியதில்லை.

[3ம் பத்தியின் தொடர்ச்சி]

முதலியவர்களுடன் பெருங் கூட்டமாக வரவேற்று, அன்று மாலை திருச்சி டவுன் ஹாலுக்கு முன்பாக சுமார் 2500 ஜனங்களுக்கு மேல் உள்ள ஒரு பெரிய கூட்டத்தில் "சட்ட சபையும் பார்ப்பனரல்லாதார் கடமையும்" என்பதுபற்றியும் கதரைப்பற்றியும் இரண்டரை மணி நேரம் உபன்யாசம் செய்தார். திருச்சி சுற்றுபக்க கிராமங்களிலிருந்தும் மற்றும் பலபாகங்களில் இருந்தும் எல்லா கக்ஷியைச்சேர்ந்த ஜனங்களும் ஏராளமாய் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது,

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரின்

சுற்றுப்பிரயாணம்.

தூத்துக்குடி.

ஈரோடு திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் 26-9-26-ந் தேதி இவ்வூருற்று இந்நகர மேலவூர் திரு சி. வ. அவர்கள் கலாசாலை ஆசிரியர்ச் சங்க ஆண்டு விழாவில் அவைத்தலைமை வகித்து உபசாரப் பத்திரம் பெற்று ஆசிரியர் சிஷ்ய குழாங்களின் கடமைகளையும், முற்கால, தற்கால கல்வியின் பாகுபாடுகளையும் என் போன்ற பாமரர் மனத்திலும் பசுமரத்தாணி யொக்கப் பதியு வண்ணம் தக்க மேற்கோள்களுடன் எடுத்தோதி இன்புறச் செய்ததின்றி 27-9-26-௳ இந்நகர அப்பர், மாணிக்கவாசகர் பெண் பாடசாலையைப் பார்க்க வேண்டுமென்று அப்பாடசாலை உபாத்தியாயர் விருப்புற்றழைக்க வேண்டுகோளைச் சிரமேற் கொண்டு கன்னியாசாலை சென்று அப்பள்ளி உபாத்திமார் உபாத்தினிகள் மாணவிகளின் நல்வரவுக்காளாகி அப்பள்ளி மாணவிகளால் பாடப்பெற்ற தேவாரம் திருவாசகம் போன்ற பாக்களையும் கோலாட்டம் முதலிய விளையாட்டுகளையும் கண்டளவிலா ஆனந்தம் கொண்டாசிர்வதித்துவிட்டு கீழ்வரும் பொருள்கொண்ட ஓர் சிறிய சொற்பொழிவும் நிகழ்த்தியருளினர். அதாவது:—

இக் கன்னியாசாலையின்கண் ஆடம்பரம் ஒரு சிறிதுமில்லாது மிக்க பெருமையோடு கல்விப் பொருளைப் போதிக்கும் உபாத்தினிகளின் உயர் அரிய கொள்கையைக் கண்டென்மனம் இறும்பூதெய்துகிறதுடன் தேவாரம் திருவாசகம் போன்ற பாக்களையே பாடிய கானங்களென் னிரு செவிக்கும் இன்பம் ஊட்டியதெனினும் கைராட்டினம் ஸ்தாபித்து நூல் நூற்கும் தொழிலை இப்பள்ளி மாணவிச் சிறுர்களுக்கு போதித்து வருவதோடின்று தூய்மைக் காஸ்பதமாகிய கதரையே அணியும்படியும் கேட்டுக்கொண்டார். நிற்க,

அன்று சாயங்காலம் 7 மணிக்கு இவ்வூர் வட்டக் கிணத்து மணல்பறப்பெனும், காந்தி சவுக்கில் வழக்கறிஞர் திருவாளர் குமாரசாமி பிள்ளை அவர்களின் அவைத் தலைமையின் கீழ் குழுமிய மாபெருங் கூட்டத்தில் (தற்கால ராஜீய நிலையும் நம் பார்ப்பனரல்லாதாரின் கடமையும்) என்ற பொருள்பற்றி சுமார் 3 மணி நேரம் கல்லும் கசிந்துருகு வண்ணம் ஓர் பெருஞ் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு மறுநாட் காலை அதாவது, 28-9-26-௳ மதுரைமாநகர் சென்றனர். நம் பெரியார்.

குறிப்பு:—நாயக்கர் மெய்யுரைக்குப் பின் இந் நகரி லெங்கு நோக்கினும் நால்வர் குழுமும் கூட்டத்திலும் சுய மதிப்பு, சுய மரியாதை என்ற பேச்சின்றி பிரிதெப் பேச்சுக்கும் இடங் கிடைத்தல் துர்லபமென்பது மிகையாகாது. சுருங்கக் கூறின் 'ஸ்வராஜ்யம்" "தேசம்" "காங்கிரஸ்" எனச் செப்பி, காந்தி சீடர்கள் என்ற கன்னக்கோல் கரத்திலேந்தி, மக்களின் ஒப்புயர்விலா பொக்கிஷமாம் வாக்குரிமைகளைக் கொள்ளைகொண்டு தம்மினத்தார் இந்திரபோகம் அநுபவிக்க சட்டசபை செல்ல கங்கணங் கட்டித் திரியும் "சுயராஜ்யக் கட்சி" எனும் பார்ப்பனக் கட்சிக்கு இங்கு சாவுமணி அடித்தாச்சுது என அச்சமில்லாதறைவேன்.

பார்ப்பனீயம் வீழ்க சுயமதிப்பு வாழ்க.

பெருமாள், தூத்துக்குடி.

மதுரையில்

ஆடம்பரமான வரவேற்பு.
மகாஜனங்களின் ஊக்கம்.
28—9—1926.

வைக்கம் வீரர் ஈரோடு திரு. இராமசாமி நாயக்கர் அவர்கள் நேற்று திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் தூத்துக்குடியிலிருந்து இங்கு விஜயம் செய்தார்கள். வைக்கம் வீரர் விஜயம் செய்யப்போவதாக ஏற்கனவே வால் போஸ்டர் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், தண்டோரா மூலமாகவும் நகரெங்கும் பிரசித்தம் செய்யப்பட்டது அதற்கிணங்க ஏராளமான ஜனங்கள் ரயிலடிக்கு வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீமான் நாயக்கர் வண்டியை விட்டிறங்கியதும், திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்களாலும், முனிசிபல் சேர்மென் திரு. ஆர். எஸ். நாயுடு அவர்களாலும், மாலை சூட்டப்பட்டதோடு மற்றுமுள்ள முனிசிபல் கவுன்சிலர்களாலும் பொது ஜனங்களாலும் மாலைகள் சூட்டப்பட்டன. நாடார் மகாஜன சங்கத்தார் சங்கத்தின் சார்பாக மாலை சூட்டினார்கள். பின்னர் முனிசிபல் கவுன்சிலரும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களிலொருவருமாகிய ஜனாப் கா. ம. அலாவுதீன் இராவுத்தர் அவர்கள் ஓர் பெரும் ரோஜாமாலையைச் சாற்றியவுடன் தீண்டப்படாதார் பிரதிநிதிகளிடம் கொஞ்சநேரம் சம்பாஷணை செய்துவிட்டு பாண்டுவாத்தியம்முழங்க மோட்டாரில் திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஜாகைக்கு பெருந்திரளான ஜனங்களோடு ஊர் வலமாக அழைத்து செல்லப்பட்டது. பின்னர் திரு. நாயக்கர்அவர்கள் காஸ்மாபாலிடன் கிளப்பில் நடைபெற்ற தேக்கச்சேரிக்கும் சித்த தரும வைத்தியசாலை திறப்பு விழாவுக்கும் ஸ்ரீ திருஞானசம்பந்த பண்டார ஸன்னதி மடாலயத்திற்கும் சென்றுவிட்டு மாலை 7-30-மணிக்கு மேலமாசிவீதி நிர்த்தனசாலையில் "சட்டசபையும் பிராமணரல்லாதாரும்" என்பது பொருளாகக்கொண்டு சுமார் $2\frac{1}{2}$ மணி நேரம்வரை ஓர் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு அன்றிரவே திருச்சிக்குப் பிரயாணப்பட்டார். சொற்பொழிவு அடுத்த இதழில் வெளிவரும்.

(திராவிடன்.)

திருச்சிராப்பள்ளியில்

29௳ காலை மெயிலில் திருச்சி ஜங்கிஷனில் திருச்சி சேர்மென் ஸ்ரீமான் ரத்தினவேலுத்தேவர்

[இதன் தொடர்ச்சி 1ம் பத்தியில் பார்க்க]

"காங்கிரஸ் விளம்பர சபை."

நமது பார்ப்பனர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றும் பொருட்டும் வஞ்சிக்கும் பொருட்டும் "காங்கிரஸ் விளம்பர சபை என்பதாக ஒரு யோக்கியப் பொறுப்பற்றதும் அயோக்கியத்தனமானதுமான ஒரு பெயரை வெளிக்குக்காட்டி அதன் பேரால் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாயும், பார்ப்பனரல்லாதார் பேரிலும் அவர்கள் இயக்கத்தின் பேரிலும் பொது ஜனங்களுக்கு அசூயை, துவேஷம் முதலியதுகள் உண்டாகும்படி பல கட்டுக் கதைகளை ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் எழுதிவருகிறார். இது எவ்வளவு கெட்ட எண்ணமும் வஞ்சகப் புத்தியும் கொண்டது என்பது நாம் எடுத்துக் காட்டவேண்டியதில்லை. இதுகள் ஒவ்வொன்றுக்கும் பதிலெழுத வேண்டுமானால் அதற்கென்றே தனிப் பத்திரிகையும் ஆள்களும் வேண்டும் ஆனால் ஒரு பானை அரிசிக்கு ஒரு சோறு பதம் என்பது போல் ஒரு விஷயத்தை விளக்குகிறோம். அதாவது மலையாள மாப்பிள்ளை கலவரத்தில் மூடு வண்டியில் அகப்பட்டு திக்குமுக்கலாடி இறந்துபோன சம்பவத்தைக் குறித்து 22-9-26-உ சுதேசமித்திரனில் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியார் இதைப்பற்றி ஒன்றும் செய்யவில்லை என்றும் மற்றவர்கள் செய்ததற்கு விரோதமாயிருந்ததாகவும் எழுதியிருக்கிறது. இது எவ்வளவு பெரிய அக்கிரமம். மூடு வண்டி கொலை பாதகம் விஷயமாய் சட்ட சபை நடவடிக்கையை ஒத்தி வைக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டு வந்தவர் அப்போது ஜஸ்டிஸ் கட்சியில் முக்கிய ஸ்தானத்தையும் ஒரு மந்திரிக்கு காரியதரிசியுமாயிருந்த ஸ்ரீமான் ஆர் கே. ஷண்முகம் செட்டியாரே ஆவர். அவர் அதற்காக ஏற்பட்ட கமிட்டியில் முக்கிய அங்கத்தினராயிருந்து சர்க்காருக்கு எதிராய் பலமாய் வாதாடியவரும் ஷை ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தவரே ஆவர். ஆனால் அக் கமிட்டியில் இருந்துகொண்டு சர்க்காரை ஆதரித்தவர் ஒரு பார்ப்பனரே ஆகும், அவர்தான் ஸ்ரீமான் மஞ்சேரி ராமய்யர். ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர் மலையாள மாப்பிள்ளைகளுக்கு அனுகூலமாயும் சில வெள்ளைக்காரருக்கு விரோதமாயும் அபிப்பிராயம் கொடுத்ததால்தான் அந்த ரிபோர்ட்டு வெளியில் வராமல் போய்விட்டது. ஸ்ரீமான் ஆர்.கே.ஷண்முகம் செட்டியார் அந்தக் காலத்தில் ஜஸ்டிஸ் கட்சி பிரதிநிதியாக இருந்தார் என்பதை ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஒப்புக்கொள்ளுகிறாரா? மறுக்கிறாரா? இம்மாதிரி வேண்டுமென்றே ஜனங்களை ஏமாற்ற இந்தப் பார்ப்பனர் எழுதும் எழுத்தும், பேசும் பேச்சும் சூழ்ச்சித்தனமானது என்று இதிலிருந்தாவது பொது ஜனங்களுக்கு விளங்கவில்லையா?

ஈரோடு முனிசிபாலிட்டி

ஈரோடு முனிசிபாலிட்டியைப் பற்றிச் சில விஷயங்கள் கேள்விக் குறியுடன் எழுதப்பட்டிருந்ததற்கு ஸ்ரீமான் சீனிவாச முதலியார் அவர்கள் அவற்றில் சிலதுகளுக்கு மறுப்பு எழுதியிருக்கிறார். அவற்றைப் பின்னால் விபரமாக நமது பத்திரிகையில் போட்டு சமாதானம் எழுதப்படும்.

ராயப்பேட்டை தேர்தல்.

பார்ப்பனர்களின் சட்ட ஞானம்.

ஸ்ரீமான் பி. எஸ். குருசாமி நாயுடு அவர்களும், ஸ்ரீமான் ஒ. ஏ. ஒ. கே. லக்ஷ்மணன் செட்டியார் அவர்களும், ராயப்பேட்டை டிவிஷன் நகரசபைத் தேர்தலுக்கு அபேக்ஷகர்கள். இதில் ஸ்ரீமான் செட்டியார் அவர்கள் நியமன தேதியில் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாயிருந்ததால் சட்டப்படி அபேக்ஷகராயிருக்க அருகரல்லவென்று கமிஷனர், அவரை நீக்கித் தேர்தல் நடத்த உத்திரவிட்டார். இதன்மேல் அத்தேர்தலை நிறுத்த நமது பார்ப்பனர் சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டில் ஒரு பார்ப்பன நீதிபதியிடம் தடை உத்திரவு வாங்கினார்கள். அது அவரிடமே நிவர்த்தி செய்யப்பட்டும் மறுபடியும் இதன் பேரில் நமது பார்ப்பனர் ஹைக்கோர்ட்டில் பார்ப்பனரல்லாத மூன்று ஜட்ஜிகளிடம் ஒரு தடை உத்திரவு வாங்கினார்கள். இதையும் அவர்களிடமே நிவர்த்தி செய்து 30-ந் தேதிக்குள் தேர்தல் நடத்த மூன்று ஜட்ஜிகளால் உத்திரவிடப்பட்டது. இம் மூன்று ஜட்ஜிகள் உத்திரவுக்கு விரோதமாய் மறுபடியும் ஒரு பார்ப்பன ஹைக்கோர்ட் ஜட்ஜியிடம் நமது பார்ப்பனர் அத்தேர்தலையும் நடைபெறாதபடி ஒரு தடை உத்திரவு வாங்கிவிட்டார்கள். இந்த நிலையில் சென்னை பிரதம நீதிபதி அவர்கள் இந்த நடவடிக்கையில் சந்தேகப்பட்டு மூன்று ஜட்ஜிகள் கூடி பைசல் செய்த ஒரு விஷயத்தை மறுபடியும் ஒரு ஜட்ஜியிடம் போய் எப்படி மாற்றிக்கொள்ளலாம் என்று கூட கோர்ட்டில் பார்ப்பன வக்கீல்களைக் கேட்டிருப்பதாகவும் அதற்கு அவர்கள் சட்டசம்மதமான ஆதாரமிருப்பதாகவும் ஒரிஜனல்என்ற காரணத்தை உத்தேசித்து அங்கு போனதாகவும் சொல்லித் திருப்தி செய்திருக்கிறார்கள். அப்படியானால் அதையும் என்னிடமே ஏன் கொண்டு வந்திருக்கக்கூடாது என்றும் பிரதம நீதிபதி அவர்கள் கேட்டிருக்கிறார். அதற்கு சட்ட சம்பந்தமான சமாதானமாக அந்தக் காரணம் இந்தக் கோர்ட்டுக்கு வரக்கூடியதல்ல என்று சொன்னதாகத் தெரியவருகிறது.

இதைப் பார்த்தால் சட்டமியற்றுவது பார்ப்பனர், அதை விவாதிப்பது பார்ப்பனர், அதற்கு தீர்ப்புச் சொல்லுவதும் பெரும்பாலும் பார்ப்பனர் என்று ஏற்படுகிறது. இந் நிலையில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் என்கிற வகுப்பு உணர்ச்சி உள்ள விவகாரங்களில் பார்ப்பனரல்லாதாருக்கு நியாயம் கிடைக்குமென்று உறுதியாய் நம்ப இடமிருக்கிறதா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டு விடுகிறோம்.

கோயமுத்தூர் ஜில்லா சட்டசபைத் தேர்தல்.

நமது ஜில்லா சட்ட சபைத் தேர்தல் விஷயமாகச்சென்ற இதழில் ஒரு வியாசம் எழுதப்பட்டிருந்ததை நேயர்கள் வாசித்திருக்கக்கூடும். அவ்வியாசத்தின் வேண்டுகோட்படியே குடியான வகுப்பைச் சேர்ந்த அபேக்ஷகர்களான இரண்டு கவுண்டர் கனவான்களில் ஒரு கனவானான ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் பின் வாங்கிக்கொண்டதாக கேள்விப்படுகிறோம். தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து தங்கள் சமூகத்தாரில் யாராவது ஒருகனவான் சட்ட சபைக்கு வர வேண்டும் என்கிற ஒரே எண்ணத்தின் பேரில் மற்றொரு கவுண்டர் கனவானுக்காக விட்டுக் கொடுத்த ஸ்ரீமான் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களின் பெருந்தன்மையையும், குலாபிமானத்தையும், நாம் மனமாரப் போற்றுகிறோம். நாம் முந்திய வார இதழில் எழுதியது போலவே ஒருவர் பின் வாங்கிக் கொண்டதினாலே மற்ற கனவானுக்கு யாதொரு பிரயத்தனமு மில்லாமல் சட்ட சபை ஸ்தானம் கிடைத்துவிடும் என்று நம்பி அஸ்வாரஸ்யமாய் இருந்துவிடக் கூடாது என்றும் தக்க முயற்சி எடுத்துக் கொண்டு கிராமம் கிராமமாய் வேளாள சமூக பிரசாரகர்களைக்கொண்டு பிரசாரம் செய்து கிராமத்துகுடியான மக்களுடைய மனதைத் திருப்ப முயற்சிசெய்யவேண்டும், என்றும், அப்படிக்கில்லாமல்அஸ்வாரஸ்யமாயிருந்தால் கண்டிப்பாய் ஏமாற்றமடைய நேரிடும் என்றும், தெரிவித்துக் கொள்வதோடு ஸ்ரீமான் சங்காண்டாம்பாளையப் பட்டக்காரக் கவுண்டர் அவர்களுக்குவெற்றி கிடைக்க வேண்டியது அவசிய மென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தீண்டாமை விலக்குச் சட்டம்.

"பொதுத் தெருக்களில் எவரையேனும் நடக்கக்கூடாது என்று தடுப்பவருக்கு 100 ரூபாய் வரையில் அபராதம் போடலாம்" என்கிறதாக ஒரு பிரிவை சென்னை, ஜில்லா லோகல் போர்டு சட்டங்களில் ஒரு பிரிவாகச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீமான் வீரய்யன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் சட்ட சபையில் நிறைவேறி விட்டதாகவும், முனிசிபாலிட்டி சட்டத்திலும் இவ்வித திருத்தம் செய்யவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட திருத்தம்தான் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதாகவும் ஸ்ரீமான் வீரய்யனவர்களால் தெரிவிக்கப்படுகின்றன.

குறிப்பு:—இவ்வித சட்டம் செய்யப்பட்டதுபற்றி நாம் மிகுதியும் களிப்பெய்துகிறோமானாலும் பார்ப்பன வக்கீல்களும் பார்ப்பன நீதிபதிகளும் இச்சட்டம் செய்தவர் கருத்துப்படி பலனளிக்கச் சம்மதிப்பார்களா? அவர்களது சட்ட ஞானமும் பாஷ்ய ஞானமும் இச் சட்டத்தை உயிருடன் வைத்திருக்கச் சம்மதிக்குமா? என்று கேட்கிறோம் ப-ர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஸூ புரட்டாசி-மீ 17-உ

"தேசிய அறிக்கை"

—:o:—

மேல்படி தலையங்கம் கொண்ட அறிக்கையொன்று சென்னைத் "தமிழ்நாடு" காரியாலயத்திலிருந்து நமக்கு அனுப்பப்பட்டதை வேறு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதை அனுசரித்து ஸ்ரீமான் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் அவர்களால் ஒரு அச்சடித்த அழைப்புக் கார்டும் சிலருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவ்வழைப்புக்கு யாவரும் போக வேண்டுமென்றே வேண்டிக் கொள்ளுகிறோம். ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தாயாருக்கு இது சமயம் கடினமான காயலாவாயிருக்கிறபடியால் 9-ந் தேதிக்கு சென்னைபோக அவருக்கு சவுகரியமிருக்குமோ இருக்காதோ என்பது சந்தேகமாயினும் அது பற்றி நமது அபிப்பிராயத்தை தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தேசிய அறிக்கையில் குறித்திருக்கும் ஒரு விஷயத்தை நாமும் பலமாய் ஆதரிக்கிறோம். அதாவது "சுயராஜ்யக்கக்ஷி பிராமணரல்லாதாருக்கு விரோதமாய்க் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்து வருகிறது * * * இம்மாதிரியான நிலைமையை இன்னும் வளரவிட்டுக்கொண்டே போனால் பிராமணரல்லாதாருக்குத் கெடுதல்வரும்" என்பதாகும். இந்த அபிப்பிராயத்தை நாம் இரண்டு வருஷத்திற்கு முன்னதாகவே கொண்டுள்ளோம். ஆதலால் "தமிழ்நாடும்" டாக்டர் நாயுடுகாரு அவர்களும் இப்போது, இதை வெளிப்படையாய் வலியுறுத்த முன்வந்ததற்குப் பார்ப்பனரல்லாத மக்கள் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருப்பதுடன் இதற்காக ஸ்ரீமான் டாக்டர் நாயுடு அவர்கள் எடுத்துக் கொள்ளும் எவ்வித முயற்சிக்கும் ஆதரவளிக்க வேண்டியது தமிழ் மக்கள் கடமை என்றே சொல்லுவோம். ஆனால் 'காங்கிரஸ்' என்னும் விஷயத்தில் டாக்டர் நாயுடு அவர்கள் அபிப்பிராயத்தை நாம் ஆதரிக்க முடியாததற்கு மிகுதியும் வருந்துகிறோம். சுயராஜ்ஜியம் என்னும் தேசிய உணர்ச்சியில் டாக்டர் நாயுடு அவர்களுக்கு நாம் மேம்பட்டவரல்லவென்றாலும் குறைந்தவரல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு சுயராஜ்ஜியத்தைவிட மக்கள் சுயமரியாதையே சிறந்ததென்பதும் அதுவே மக்களின் பிறப்புரிமை என்பதும் நமது அபிப்பிராயம். அல்லாமலும் காங்கிரஸ் என்கிற விஷயத்திலும் அதில் உள்ள கொள்கையை உத்தேசித்து தான் அதனிடம் மக்கள் பக்தி செலுத்த வேண்டுமே அல்லாமல் காங்கிரஸ் என்கிற பெயருக்கே பக்தி செலுத்த வேண்டுமென்று சொல்வதை நாம் ஒப்புக்கொள்ள முடியாததற்கும் மன்னிக்க வேண்டுகிறோம். உதாரணமாக பிராமணன் என்பவன் மதிக்கத் தக்கவன் என்றால் பிராமணன் என்கிற பெயரை உடைத்தாயிருப்பதற்காகவா அல்லது பிராமணர் என்பதற்கு ஏற்பட்ட கொள்கையை உடைத்தாயிருப்பதற்காகவா? அன்றியும், நமது டாக்டர் நாயுடுகாரு அவர்களே சுயராஜ்யக் கட்சியை முன்பெல்லாம் ஆதரித்த காலத்திலும் தேசமுன்னேற்றத்தை உத்தேசித்துத்தான் தாம் அதை ஆதரிப்பதாகச்சொல்லி வந்தார். ஏனெனில் அதனிடத்தில் சில ஒப்புக்கொள்ளத்தக்க கொள்கை இருப்பதாலேயே என்று வைத்துக்கொள்ளலாம். ஆனால் இப்போதும் அதே பெயரும் அதே கொள்கையும் அதே திட்டமும் இருக்கும்போதே "சுயராஜ்யக் கட்சி பிராமணக் கட்சி அது அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றால் பிராமணரல்லாதாருடைய கதி அதோ கதியாய்ப்போய்விடும்" என்று "தமிழ் நாடு" மூலமாய் எழுதி இருக்கிறார். இதுபோலவேதான் நாமும் காங்கிரஸ் என்பது பார்ப்பனர்களும் படித்தவர்களும் முறையே பார்ப்பனரல்லாதாரையும் பாமர மக்களையும் ஏமாற்றி உத்தியோக பதவி முதலியதுகள் பெற்று வாழ ஏற்பட்டு அதற்கேற்ற கொள்கைகளே அதனில் இருத்தப்பட்டிருக்கிறது என்றும் மத்தியில் மகாத்மா தலைமை வகித்து நடத்திய காலத்தில் சுய மரியாதை உண்மையான சுயராஜ்யம் முதலியவைகள் அடையத் தக்க கொள்கைகள் அவற்றில் இருந்தது என்றும் இப்போது பழையபடி பார்ப்பனர் படித்தவர் ஆகியவர்க்கு அனுகூலமாகவும் மக்கள் சுயமரியாதைக்கும் பார்ப்பன ரல்லாதார்க்கும் ஆபத்தானதாகவும் உள்ள கொள்கைகளே காங்கிரசில் வைக்கப்பட்டுப் போய்விட்டதால் மக்கள் சுய மரியாதையையும் பார்ப்பனரல்லாதார் சமத்துவத்தையும் உத்தேசித்து காங்கிரசை திருத்தவோ அழிக்கவோ வேண்டியது பொதுமக்களின் கடமை என்றும் ஏனெனில் காங்கிரசுக்குஇதுசமயம் கொள்கை என்பதே இல்லாமல் சுயராஜ்யக் கட்சியின் கொள்கைகளைத்தான் அப்படியே தனது கொள்கையாக ஏற்றுக் கொண்டுவிட்டது என்றும் சுயராஜ்யக் கட்சி கொள்கைகளோ பார்ப்பனரல்லாதாரை அழிக்கக் கட்டுப்பாடாய் பார்ப்பனர்கள் செய்துவரும் சூழ்ச்சி என்றும் இதை டாக்டர் நாயுடுகார் அவர்களே ஒப்புக்கொள்ளுகிறார் என்றும் சொல்லுகிறோம்.

தேசிய உணர்ச்சி மக்களுக்குள் விளங்க வேண்டும் என்கிற டாக்டர் நாயுடுகாரின் அபிப்பிராயத்தையும் நாம் மனமார ஆதரிக்கிறோம். ஆனால் அது இன்னது என்று விளக்கப் படவேண்டும். அதற்காக ஏற்படுத்தப்படும் இயக்கத்திற்கும் முயற்சிக்கும் தேசிய உணர்ச்சிக்கேற்ற கொள்கைகளை அமைக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் புண்ணியம், தர்மம், மோக்ஷம், தெய்வம் என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு பார்ப்பனர்கள் வயிறு வளர்ப்பதுபோல் சுயராஜ்யம் உரிமை தேசிய உணர்ச்சி சர்க்காரை எதிர்த்தல் காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி என்கிற பெயர்களைச் சொல்லிக் கொண்டு பாமர மக்களை ஏமாற்றி பலர் வயிறு பிழைக்கும்படியும் உத்தியோகம் பெறும்படியும் செய்து விடக்கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அல்லாமலும் சுயராஜ்யக் கட்சியோடு ஜஸ்டிஸ் கட்சியை ஒப்பிடுவதிலும் நாம் டாக்டர் நாயுடுகாரு அவர்களின் அபிப்பிராயத்திற்கு சற்று மாறுபட நேர்ந்ததற்கும் மன்னிக்க வேண்டுகிறோம். சுயராஜ்யக் கட்சியைப்பற்றி டாக்டர் நாயுடுகாரே அது பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய் கட்டுப்பாடாக பிரசாரம் செய்யும் கட்சி என்று ஒப்புக்கொண்டு விட்டதால் இனி நாம் அதன் கேட்டைப்பற்றி பேசவேண்டியதில்லை. இப்படி இருக்க ஜஸ்டிஸ் கட்சியை அதற்குச் சமமாய்ச் சொல்லக் காரணம் என்ன? ஜஸ்டிஸ் கட்சியானது பார்ப்பனரல்லாதார் நன்மைக்காக ஏற்பட்டது என்றும் அது நமது நாட்டுப் பார்ப்பனரல்லாதாருடைய கட்சி என்றும் அது பார்ப்பனரல்லாதாருக்கு பல நன்மைகள் செய்திருக்கிறது என்றும் டாக்டர் நாயுடுகாரே பல தடவைகளில் பேசியும் "தமிழ் நாட்டில்" எழுதியும் இருக்கிறார். அதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அப்படிக்கு இருக்க அந்த கட்சியை பார்ப்பனரல்லாதாரை அழிக்க கட்டுப்பாடாய் வேலை செய்யும் சுயராஜ்யக் கட்சிக்கு சமமாக எப்படிச் சொல்லக்கூடும். ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோகம் பெறுகிறார்கள் என்று சொல்வதானால் உத்தியோகம் பெறக்கூடாது என்று எந்த தேசிய திட்டம் சொல்லுகிறது; காங்கிரசிலாகட்டும் வேறு எதிலாகட்டும் சர்க்காரோடு ஒத்துழையாமை என்பதே கிடையாது. உத்தியோகங்களோ இருக்கின்றன; இதை என்ன செய்வது. ஜஸ்டிஸ் கட்சியார் இந்த உத்தியோகங்களை வேண்டாம் என்று சொல்வதன்மூலம் சுயமரியாதைக்காவது சுயராஜ்யத்திற்காவது காங்கிரசுக்காவது லாபமுண்டா? அப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோகம் பெறுகிறார் உத்தியோகம் பெறுகிறார் என்று சொல்வதின் அர்த்தமென்ன? மொத்தத்தில் நமது தேசத்தில் உள்ள உத்தியோகம் தான் எவ்வளவு? காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக் கொண்ட பிராமணர்கள் அனுபவிப்பது எவ்வளவு? மிதவாதிகள் என்று சொல்லிக் கொண்ட பிராமணர்கள் அனுபவிப்பது எவ்வளவு? இவர்கள் சந்ததிகள் அனுபவிப்பது எவ்வளவு? உண்மையில் ஒன்றிலும் சேராத மக்கள்

அனுபவிப்பது எவ்வளவு? இந்தக்கணக்கு பார்த்தால் ஜஸ்டிஸ் கட்சியார் அனுபவிப்பது எவ்வளவு என்பதும் அதினால் சர்க்காருக்கு ஏற்பட்டு விட்டதாகச் சொல்லும் பலம்எவ்வளவுஎன்பதும் அவர்கள்அனுபவிக்காவிட்டால் சர்க்கார் பலம் எவ்வளவு குறையும் என்பதும் அதோடு பார்ப்பனரல்லாதார் கதி என்னவாகும் என்பதும் விளங்காமல் போகாது. பொதுவாக ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் திட்டத்தை ஒத்துழையா மனப்பான்மை கொண்டவர்கள் எவரும்ஆதரிக்க முடியாது என்பதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோமானாலும் பார்ப்பனரல்லாதார் நன்மையை உத்தேசித்து ஜஸ்டிஸ் கட்சியுடனும், அவசிய மேற்பட்டால் சர்க்காருடனும் ஒத்துழைப்பதாக டாக்டர் நாயுடுகாரு அவர்கள் சொல்லியுமிருக்கிறார். ஆதலால் டாக்டர் நாயுடுகாரு வாக்குப்படியே சுயராஜ்யக்கட்சி பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாய்—பார்ப்பனரல்லாதாரை அடியோடு ஒழிக்க கட்டுப்பாடாய் வேலை செய்கிற கக்ஷியாய்ப் போய்விட்டதால் பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உழைக்கிறவர்கள் சர்க்காரோடு ஒத்துழைக்காவிட்டாலும் ஜஸ்டிஸ கட்சியாரோடாவது ஒத்துழைக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதுவும் இல்லாவிட்டாலும் அதற்கு கெடுதி செய்யாமலாவது இருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். பார்ப்பனரல்லாதாருக்கு ஏற்படப்போகும் ஆபத்தை நீக்கும் பொருட்டும் தேசிய உணர்ச்சியை வளர்க்கும் பொருட்டும்8-10-26ல் அல்லது 9-10-26ல் சென்னை தமிழ் நாடு ஆபீசில் கூட்டப்படும் தேசியவாதிகள் மகாநாட்டுக்கு இதை விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம்.

பாலக்காடு வித்வான்

நடேசம்பிள்ளை.

பாலக்காடு வித்வான் நடேசம் பிள்ளையவர்கள் 2 வாரங்களின் முன்னர் இம்மண்ணுலக வாழ்வை நீத்தாரெனக் கேட்டு மிக வருந்துகிறோம். பிள்ளையவர்கள் தமிழிலும் வட மொழியிலும் சிறந்த புலவர்; அவற்றோடு ஆங்கிலமும் மலையாளமுங் கற்றவர். பண்டைய சாஸ்திர நுட்பங்களை வடமொழி ஆங்கில மேற்கோள்களுடன் இனிமையாகச் சொற்பொழி வாற்றுதலில் வல்லவர். இத்தகையார் ஒரு பார்ப்பனராய்ப் பிறந்திருப்பின், மஹாவித்வான், சிரோன்மணி, மஹா மஹோபாத்தியாயர் முதலிய பெரிய பெரிய பட்டங்கள் தாமே வந்தடைந்திருக்கும் இறந்தமைக்கும் பார்ப்பனப் பத்திரிகைகள் பெரிய பெரிய தலைப்புக்கள் கட்டிப் பிரமாதமாக வர்ணித்து ஆரவாரஞ் செய்திருக்கும். இத்தகைய நமது அறிஞர் நீக்கத்தால் தமிழ் நாடும் தமிழன்னையும் தம் தவப்புதல்வனை இழந்தனர். பிள்ளையவர்கள் பிரிவாற்றாமைக்கு வருந்தும் அவரது குடும்பத்தார்க்கு எமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆன்மா சாந்தியடைவதாக.

நவ சக்தி.

இத் தலைப்பைக் கண்டவுடன் 'நவ சக்திக்கும்' 'குடி அரசு'க்கும்ஏதாவது போர் நிகழுமோ எனப் பலர் சங்கடப்படவும், பலர் சந்தோஷப்படவும், பலர் வேடிக்கை பார்க்கலாம் என்று நினைக்கவும், இடங் கொடுக்குமோ என்று நினைக்கிறோம். ஆனாலும் அம்மாதிரியாக எதிர் பார்ப்பவர்கள் கண்டிப்பாய் ஏமாற்ற மடையக்கூடும். நிற்க சென்ற 'குடி அரசு' இதழில் ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரை, ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தொழிலாளர் சங்கத்திற்கு அழைத்து அவரை அறிமுகப்படுத்தி வைத்ததைப்பற்றி எழுதியிருந்தோம். அதைக்கண்டு அவாது 'நவ சக்தி' 'குடி அரசை'ச் சீறி இருக்கிறது. ஆனால் அதற்காக நாம் சீற்றம் கொள்ளவில்லை. தொழிலாளருக்கென்றே அவதரித்தவர் எனத் தொழிலாளரின் நன்மதிப்பையும், பின்பற்றுதலையும், பெரிதும் பெற்ற ஸ்ரீமான் முதலியார் அவர்கள் வாக்கால் "ஸ்ரீமான் அய்யங்கார் தொழிலாளர் விஷயத்தில் மிகுந்த சிரத்தை உள்ளவர் என்றும் காங்கிரஸ் அக்கிராசனப் பிரசங்கத்தில் தொழிலாளரைப்பற்றிக் கூறவேண்டும் என்றும், ஸ்ரீமான் அய்யங்கார் சட்ட சபையில் தொழிலாளருக்கு ஏற்ற சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்றும்" கேட்டுக்கொண்டால் இந்தத் தேர்தல்காலத்தில் தங்கள் ஓட்டுகளை வினியோகிக்கும் விஷயத்திலாகட்டும் தேர்தலுக்கு உதவி செய்யும் விஷயத்திலாகட்டும் தொழிலாளர்களின் மனப்பான்மை என்னவாகும் என்பதுதான் நமது கவலையே ஒழிய 'நவசக்தி' சொல்லுகிறபடி பிரசாரத்தில் கலவாது விலகி நிற்கும் ஸ்ரீமான் முதலியாரை 'குடி அரசு' வலிய ஈர்க்கவில்லை என்பதை உறுதி கூறுகிறோம். ஆனால் ஒரு சந்தேகம். ஓட்டுகள் இருக்கும் தொழிலாளச் சகோதரர்களிடம் தேர்தலுக்கு நிற்கும் ஸ்ரீ அய்யங்காரை அழைத்துப்போய் அய்யங்கார் தொழிலாளருக்கு உழைத்தவர் அவர் இன்னமும் உழைக்கவேண்டும், தொழிலாளருக்கு சட்ட சபையில் இன்னது செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டால் (24-9-26 சுதேசமித்திரனில் காண்க) இது வெளிப்படையான பிரசாரமல்ல என்று ஒப்புக்கொள்வதானாலும் மறைமுகமான பிரசாரம்என்றுவது எண்ண, இந்தச் சந்தர்ப்பம் இடம் கொடுக்குமா கொடுக்காதா என்பதைப் பொது மக்களே சொல்லட்டும்.

அல்லாமலும் ஸ்ரீமான்கள் டாக்டர் நாயுடு ஆரியா நாயக்கர் சக்கரை செட்டியார் ஆகிய இவ்வளவு பெயரையும் வைது கொண்டும், ஜெயிலில் வைக்கப் பிரயத்தனப் பட்டுக் கொண்டும், இருக்கிற ஒருவரைப்பற்றி இதுசமயம் நல்லுரை பகர வேண்டிய அவசியம் நமது முதலியாரவர்களுக்கு வருமானால் அதைப்பற்றி யார் மனந்தான் வெதும்பாமல் இருக்கும்? இவற்றைப் பற்றி "குடி அரசு" பிரஸ்தாபித்ததைக்கண்டு நவசக்தி சீறிவிழுந்து "குடி அரசு வெறுக்கத்தக்க உரைகளைப்பெய்திருக்கிறது" என்று எழுதி யிருக்கிறதின் திறத்தை அறிய பொதுமக்களுக்கே விட்டுவிடுகிறோம். அல்லாமலும் "நவசக்தி" யையோ, ஸ்ரீமான் முதலியார் அவர்களையோ இவ்விஷயத்தில் குற்றம் சொல்லவேண்டும் என்னும் எண்ணத்துடன் ஒரு எழுத்தும் எழுதவில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தியாவின் "ஏக தலைவ"ரான ஸ்ரீமான் எஸ், சீனிவாசய்யங்காரின் முடிவான லக்ஷியம்.

"எல்லா இந்திய காங்கிரஸ்தலைவரும்," எல்லா இந்திய சுயராஜ்ஜியக் கக்ஷித் தலைவரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், தென்னாட்டுப் பார்ப்பனத் தலைவரும், மாஜி அட்வொகேட் ஜனரலும், ஆகிய "ஏகதலைவரான" ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காருக்கு இன்னும் மூன்று லக்ஷியம் தான் இருக்கிறதாம். அதாவது:—

1. ஸ்ரீமான்கள் எ. ராமசாமி முதலியார் அவர்களையும்,பனகால் ராஜாவையும், சென்னை சட்ட சபையில் ஸ்தானம் பெறாதபடி செய்துவிடவேண்டும்.

2. தான் இந்தியா சட்ட சபைக்குத் தெரிந்தெடுக்கப்படவேண்டும்.

3. ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கரையும், ஆரியாவையும், ஜெயிலுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகிய இம்மூன்று லக்ஷியங்களும் நிறைவேறிவிட்டால் பிறகு, தான் ராஜ்ய வாழ்விலிருந்தே விலகிவிடுவாராம். ஏனெனில் ஒரு மனிதனுக்குச் செல்வம், பெண், கீர்த்தி, ஆகிய மூன்று சாதனங்கள் தான் லக்ஷியமானதாகுமாம். அவற்றில் முதல் இரண்டைப் பற்றித் தான் திருப்தியடைந்தாய்விட்டதாம் மூன்றாவதான கீர்த்திக்கு முட்டுக்கட்டையாக மேற் சொன்னபடி சென்னை சட்ட சபையில் ஸ்ரீமான்கள் எ. ராமசாமி முதலியார் பனகால் அரசர் ஆகியவர்களும், இந்தியா சட்ட சபைக்குப் போகாமல் இருக்கும்படி தடை செய்வதும் ஸ்ரீமான்கள் நாயக்கர் ஆரியா ஆகியவர்கள் தன்னை தூற்றுவதும், ஆகிய காரியங்கள் தான் தடங்கலா யிருக்கிறதாம். அய்யோ பாவம்! இம்மூன்று காரியங்களும் அய்யங்கார் இஷ்டம் போல் நிறை வேறினாலாவது அய்யங்காரின் கடைசி லக்ஷியம் நிறைவேறுமா என்பது நமக்குச் சந்தேகமாகவே இருக்கிறது.

ஜஸ்டிஸ் கக்ஷி அபேக்ஷகர்கள்.

மதுரை, உத்தமபாளையம் ஸ்ரீமான் எம், டி. சுப்பிரமணிய முதலியார், பனகால் ராஜா ஆகிய இவர்களின் சுற்றுப் பிரயாணத்தில் சென்னை சட்ட சபைக்கு ஜஸ்டிஸ் கக்ஷி சார்பாக மதுரை தஞ்சை ஜில்லாக்களுக்கு பிரதிநிதிகள் நிறுத்தியதாய்த் தெரியவருகிறது. மதுரை நகரத் தொகுதிக்கு மதுரை சேர்மென் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுகார் அவர்களையும், மதுரை ஜில்லா கிராமத் தொகுதிக்கு ஸ்ரீமான் பி. டி. ராஜன், ஷண்முகஞ் செட்டியார், ஆகியவர்களையும், தஞ்சை ஜில்லாவுக்கு ஸ்ரீமான் வீரய்யவாண்டையார், சாமியப்ப முதலியார் ஆகிய இருவர்களையும், நிறுத்தியிருப்பதாய்த் தெரிய வருகிறது.

ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரும் "தாருல் இஸ்லாமி"ன் கனவும்.

அஸ்ஸாம் காங்கிரசுக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தலைவராய் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டதால் அவரால் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு மிக்க நன்மை விளையுமென்று எதிர்பார்ப்பதாக எழுதுகிறது. இவை உலக மரியாதைக்கு ஆகச் சொல்லும் வழக்க உரைகளாகச் சொல்லப்பட்டதென்றால் அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. அப்படிக்கில்லாமல் உண்மையான உணர்ச்சியுடன் சொல்லப்பட்டதானால் "தாருல் இஸ்லாம்" கனவு காண்பதாகவே கருதுவோம். ஸ்ரீமான் அய்யங்காருக்கு கடுகளவாவது இந்து முஸ்லீம் ஒற்றுமையில் கவலையோ கருத்தோ இருந்திருக்குமானால், மகாத்மா உள்பட இந்திய மக்கள் எல்லோரும் இது சமயம் நமது தேசம் இருக்கும் நிலைமையை உத்தேசித்து வரப்போகும் அஸ்ஸாம் காங்கிரஸ் தலைமை பதவிக்கு ஒரு மகமதிய தலைவரையே தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று ஆசைப்படும் காலத்திலும், இந்து மகமதியர் ஆகிய இருசமூகங்களாலும் கொண்டாடப்பட்ட ஜனாப் மஷருல் அக், அவர்களை வேண்டிக்கொண்ட காலத்திலும், அவரும் சம்மதித்து போட்டியில்லாமல் இருந்தால் ஒப்புக் கொள்வதாய்ச் சொன்ன காலத்திலும் இவைகள் ஒன்றையும் லட்சியம் செய்யாமல் சட்டசபை முனிசிபாலிட்டி முதலிய தேர்தல்களுக்கு பணம் செலவு செய்தும், ஆள்களைவிட்டுப் பிரசாரம் செய்தும், ஓட்டுப் பெறுவதுபோல் காங்கிரஸ் தலைமை பதவிக்கும் பிரயத்தனப்பட்டு ஓட்டுப் பெற்று தலைவர் பதவியை சம்பாதித்து இருப்பாரா? என்றுதான் கேட்கிறோம். ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஜனாப்கள் ஷாபி மகம்மது சாயபு, அப்தல் அமீத்கான் சாயபு ஆகிய இவர்களை ஆதரிப்பதோடு முடிந்தது. ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அவர்களின் தீண்டாமை விலக்கு ஸ்ரீமான் ஜயவேலு அவர்களை ஆதரிப்பதோடு முடிந்தது அவரது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமை ஸ்ரீமான்கள் குப்புசாமிமுதலியார் இரத்தினசபாபதிமுதலியார் பாவலர், மாரிமுத்துபிள்ளை முதலிய கனவான்களை ஆதரிப்பதோடு தீர்ந்தது. அவரது தொழிலாளர் முன்னேற்றமும், தொழிலாளர் சங்கங்களுக்கு தேர்தல் காலத்தில் அவர்களது தலைவரைக் கூட்டிக் கொண்டு போய் அறிமுகப் படுத்திவைக்கச் செய்து அவர்களது ஓட்டுகளைப் பெறும்வரை ஆதரித்துவிட்டால் முடிந்தது. அவருடைய சுயராஜ்ய தாகமும் ஏதாவது ஒரு மந்திரி உத்தியோகம் எப்படியாவது கிடைத்துவிட்டால் முடிந்துவிடும்.

காரைக்குடி.

அக்ஷய ஹூ புரட்டாசி மீ 18-ந் தேதி (4-10-26) திங்கட் கிழமை பிற்பகலில் சென்னை, "நவசக்தி" ஆசிரியர் ஸ்ரீமான், திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தலைமையில் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா நடைபெறும்.

சென்னைத் தொழிலாளர்களும் தேர்தல் கூட்டங்களும்.

ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் தொழிலாளர்களுக்கு நமது ஸ்ரீமான் முதலியார் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பிறகு சென்னையில் ஜஸ்டிஸ் கட்சியார்களால் ஏற்படுத்தப்படும் கூட்டங்களில் ஆலைத்தொழிலாளர்கள் கலகம் செய்வதாக "திராவிடனில்" காணப்படுகிறது. இதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ; ஆனாலும் நாம் நமது தொழிலாளர் பார்ப்பனரல்லாதார் ஆகிய சகோதரர்களை ஒன்று கேட்கிறோம். அதாவது நவம்பர் மாதம் 8-உ (சட்டசபைத் தேர்தல் தீர்ந்ததற்கு)ப் பிறகு இந்தப் பார்ப்பனர்கள் நமது தொழிலாள சகோதரர்களையாவது மற்றும் இப்போது அவர்கள் நியமித்துக்கொண்டிருக்கும் பார்ப்பனரல்லாதார்களையாவது திரும்பிப் பார்ப்பார்களா கவனிப்பார்களா என்பதை தயவு செய்து யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

கோயமுத்தூரில் பார்ப்பனரல்லாத வாலிபர் சங்க ஸ்தாபனம்.

சென்னையில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்திற்குக் கிளைச்சங்கங்களாக ஒவ்வொரு நகரங்களிலும் கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்க அதன் தலைவர் ஸ்ரீமான் ஆரியா அவர்களும், காரியதரிசி ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளை அவர்களும், அதிகமான முயற்சிகள் செய்து வருவது யாவரும் அறிந்ததே. அம்முயற்சியின் பயனாகவே 23-9-26உயில் கோயமுத்தூரில் ஸ்ரீமான் ஆரியா அவர்கள் தலைமையின் கீழ்க் கூட்டப்பட்ட பெருங் கூட்டத்தில் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்க நிருவாக சபைக்கு ஸ்ரீமான் சி. வி. வி. சுப்பைய செட்டியார் தலைவர்; ஸ்ரீமான்கள் பழனிச்சாமி நாயுடு, பி. ராஜாராம் நாயுடு, உபதலைவர்கள்; ஸ்ரீமான் அ. கிருஷ்ணசாமி செட்டியார் பொக்கிஷதார்; ஸ்ரீமான்கள் எஸ். கந்தசாமி கவுண்டர் பி. சுப்பரமணிய பிள்ளை ஆகியவர்கள் காரியதரிசிகளாகவும், மற்றும் 20 அங்கத்தினர்கள் அடங்கிய நிர்வாக கமிட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டு சென்னையில் நடக்கப்போகும் பார்ப்பனரல்லாதார் வாலிப மகாநாட்டுச் செலவுக்கு ரூ. 300 வசூல் செய்யப்பட்டது.

ஸ்ரீவில்லி புத்தூர் தாலூகா அரசியல் மஹாநாடு.

நாளிது மாதம் 3, 4, தேதிகளில் நடைபெற்ற ஸ்ரீவில்லி புத்தூர் தாலூகா மஹாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீமான் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுகாரின் முகவுரைச் சொற்பொழிவில் நமது மக்கள் குறிக்கொள்ள வேண்டிய பல அரிய பொருள்கள் பொதிந்து மிளிர்கின்றன. இவ்வாரம் "குடி அரசி"ல் இடமின்மையால் வெளியிடக் கூடவில்லை. அடுத்த வாரம் வெளிவரும்.

வெளியூர்ச் செய்திகள்.

தேவகோட்டை:— சரஸ்வதி வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழா அட்சய ஆண்டு புரட்டாசித் திங்கள் 12-ம் நாள் மாலை 4-30 மணிக்கு சிதம்பர விலாஸ் பங்களாவில், திரு. பிச்சப்பா, சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது காலை சொர்ணமூர்த்தி பெண்பாடசாலை மாணவிகளால் கடவுள் வாழ்த்து ஓதிய பின் தலைவர்க்கு வரவேற்புத்தாள் வாசித்துக் கொடுத்து பாடசாலையின் அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பெற்றதும், பல பெரியார்களால் சரஸ்வதி பூஜை, திருக்குறள், ஆராய்ச்சி, சங்கங்களும் அங்கத்தவர்களும், என்ற பொருள்கள் பற்றி அழகுறப்பேசியபின் தமிழ்மறை ஓதப் பெற்று வந்தனோபசாரங்களுடன் சபை நிறைவெய்தியதென திரு. அழ. இலக்குமணச் செட்டியார் காரியதரிசி அறிவிக்கிறார்.

திருவண்ணாமலை:— ஸ்ரீ சண்முகானந்த தேவாரசபை 24, 25-9-26, தேதிகளில் தேவஸ்தானம் தர்மகர்த்தாக்கள் திரு ரா. அருணகிரி முதலியார், திரு. அ. க. அ. சி. த. வெங்கிடாசலம் செட்டியார் இவர்கள் தலைமையின் கீழ் புரிசை பிரசங்க ரஞ்சிதம் திரு. எஸ். முருகேச முதலியார் அவர்களால் முதல் நாள் "அன்பு" என்பது பொருள் பற்றியும், இரண்டாம் நாள் "மணிவாசகப் பெருமான்" என்பது பொருள் பற்றியும், அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். மறுநாள் டவுன் கிளப் பின் சார்பாய் திரு. உத்திரகோடி பிள்ளை அவர்களால் "அங்கம் வெட்டிய படலம்" என்பது பொருள் பற்றி, சொற்பொழிவு நிகழ்த்தினார். இச் சபையின் வளர்ச்சிக்கு ஓர் இல்லம் ஏற்படுத்த பொது ஜனங்கள் முன் வரவேண்டுமென காரியதரிசி திரு. பஞ்சாட்சரம் செட்டியார் நமக்கு அறிவிக்கிறார்.

திருவண்ணாமலை:— ஸ்ரீ சண்முகானந்த தேவார சபையின் ஆதரவில் 2-10-26 உ யிலும் 3-10-26 உ யிலும் டவுன் கிளப்பில் பல பெரியார்களால் அரிய சொற்பொழிவுகள் நடைபெறும் என்று காரியதரிசி திரு. அ. தா. பஞ்சாட்சரம் செட்டியார் நமக்கு அறிவிக்கிறார்.

சட்ட சபை.

சென்னை சட்ட சபைக்கு சேலம் ஜில்லாவுக்கு ஏற்பட்ட இரண்டு ஸ்தானங்களுக்கு பாலக்கோடு ஸ்ரீமான் பி. முனிசாமிக் கவுண்டர் அவர்களும் ஸ்ரீமான் C. D. அப்பாவு செட்டியார் அவர்களும் நிற்பதாக ஒரு நண்பர் அறிவிக்கிறார். இவ்விரு கனவான்களும் பார்ப்பனரல்லாதார் முன்னேற்ற விஷயத்திலும், பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை விஷயத்திலும், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ விஷயத்திலும், தேவஸ்தான மசோதா விஷயத்திலும், மிகுதியும் கருத்துள்ளவர்கள் என்பதாகவும் இக்கொள்கை உள்ளவர்களைப் பார்ப்பனரல்லாதவர்கள் ஆதரிக்கவேண்டும் என்றும் எழுதுகிறார்.

வட ஆற்காடு ஜில்லா சென்னை சட்ட சபை தேர்தல்.

நாளது 1926-ஹு நவம்பர்-மீ 8உ யன்று நடைபெறும் சட்டசபைத் தேர்தலில் வடஆற்காடு ஜில்லா வாசிகளில் மஹம்மதியரல்லாதார் தொகுதியின் ஸ்தானங்கள் மூன்றுக்கு இஜ்ஜில்லா பார்ப்பனரல்லாதாரில், ஆரணி, திரு. எ. என். பரசுராம நாய்க்கரவர்களும், வேலூர், திரு. ராவ்பஹதூர், க. கிருஷ்ணசாமி நாயுடுகாரவர்களும், குடியாத்தம், திரு. எம். வி. பீமராஜ முதலியாரவர்களும், அபேக்ஷகராக நிற்கப்போவதாய் இஜ்ஜில்லா வெங்கும் ஓர் பலத்த வதந்தி நிலவுகிறது. புறம்பேயுள்ள ஜில்லாவினரை இஜ்ஜில்லாவின் பிரதிநிதியாக சட்ட சபைக்குச் செல்ல, விட்டுத்தரப்படாதென்னும் மாப்பெருங் குழப்பம் ஒன்று உண்டாயிருக்குமித்தருணத்தில், ஷை கனவான்கள் முன் வந்துள்ளது மெச்சத் தகுந்ததேயாம். அதினும், முன்னமேயே தம்மக்களுக்கு பார்ப்பனரல்லாதாரிடம் வெறுப்பை யூட்டிவரும் குழாத்தில் எவரும் முன் வாராமை, இச்சில்லாவின் புண்ணியமேயாம்

ஷை நாய்க்கர், பழைய (உண்மை) காங்கிரஸில் ஈடுபட்டு மஹாத்மாகாந்தியவர்களின் மூவகை பஹிஷ்காரங்களின் கட்டளைக் கீழமைந்து, நம்மக்கட்குச்செய்துவந்தபலவிதத் தொண்டுகளையும், நாயுடுகாரவர்கள், வேலூர் நகர சபையிலும், தாலூகா ஜில்லா முதலிய போர்டுகளில் தலைமை ஸ்தானத்தையும் வகித்துப்புரிந்துள்ள ஊழியங்களையும், முதலியாரவர்கள், குடியாத்தம் முனிசிபல் அவைக்களத்தில் நடு நாயகமாயும், தாலூகா ஜில்லா போர்டு முதலியவற்றில் அங்கத்தினராய் வீற்றிருந்து ஆற்றி வந்துள்ள பல அரும்பெரும்பணிகளையும், இஜ்ஜில்லா அறியாததல்ல. இப்போது ஜனபணிமேற்கொண்ட மக்கள் மூவரும் மயிலைப்பார்ப்பனத் தலைவரின் மாய்கைப்பொறியில் சிக்குண்டலையும் பதடிகளே போலாது, ஆண் சிங்கங்களாயிருந்து தத்தம் ஊழியங்களைப் புரிந்து வந்திருப்பது பலரும் அறிந்தவிடயமேயாம். இச்சிங்கங்களுக்கு தேர்தல் காலத்தில் இச்சில்லா வாசிகளனைவரும தத்தம் விலைபெறுதலில்லா பெருவாரியான ஓட்டுகளைக் கொடுத்து ஆதரித்துப் பார்ப்பனரல்லாதாரின் சுய மரியாதைக் கொடியை உயர்த்தி ஜெயபேரி கொட்ட சர்வேஸ்வரன் அருள் பாலிப்பானாகவும். சுபம். ஒரு ஓட்டர்.

கதரைப் பரப்பும் வேலை.

நாகை தாலூகா கூத்தூர் கோர்க்கட ஸ்ரீராம பக்த பஜனை சபை இளைஞர்கள் ஒருங்கு திரண்டு கதரைப் பரவச் செய்ய 21-9-26-உயில் ஒரு மஹாநாடு கூட்டியதற்கிணங்க, சிக்கல் ஊழியர் கழகத்தாரும், உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும், சுமார் 200, 300 பேர் வரை குழுமியிருந்ததோடு பெண்களும் பலர் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வீதிகளும் பந்தலும் கண்கவர் வனப்பினவாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மஹாநாட்டுத் தலைவர் திரு. பக்கிரியா பிள்ளையவர்கள் தேசிய கீதங்களுடன் சிறப்பாக வரவேற்கப்பட்டார். தலைவர் முன்னுரை நிகழ்த்திய பின்னர், ஸ்ரீமான்கள் ரா. சிவ சிதம்பரம் பிள்ளை, கோவிந்தசாமி நாயுடு, ச. பாலசுப்பிரமணிய பிள்ளை முறையே ஒற்றுமை, கதர், தீண்டாமை விலக்கு என்ற பொருள்களைப்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரை முடிந்த பின்னர் சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு மகாநாடு இனிது நிறைவேறியதென சிக்கல் ஊழியர் கழக அமைச்சர் திருவாளர் ச. பாலசுப்பிரமணிய பிள்ளை அறிவிக்கிறார்.

தஞ்சை ஜில்லா போர்டு சத்திரம் பிராமணர் அல்லாதாருக்கு நியாயம் செய்யுமா?

(நா. வீ. க. எழுதியது.)

தஞ்சை ஜில்லாவில் பழைய மகாராஷ்ட்டிர அரசர் அரசாண்ட காலத்தில் இந்த ஜில்லாவில் பல இடங்களில் சத்திரங்களும் அதனைச் சேர்ந்தாப்போல் ஏழைமாணவர்கள் கல்வி கற்பதற்காக பாடசாலை, மாணவ மாணவிகளுக்கு இலவச போஜனமும் கொடுத்து வரவேண்டியதற்காக ஏராளமான மானியங்களும் விடப்பட்டிருக்கின்றன. இவைகளை இப்பொழுது ஜில்லா போர்டார் நிர்வாகம் செய்து வருகிறார்கள். இந்த ஜில்லா போர்டானது ஜஸ்டிஸ் கக்ஷியை சேர்ந்த ஸ்ரீ பன்னீர் செல்வம் பார் அட்லா பிரசிடெண்டாகவும் அவரை ஆதரிக்கும் கக்ஷி மெஜாரிட்டியுடனுமிருக்கையில் இந்த சத்திரங்களில் தங்குகிறவர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும், பிராமணர், பிராமணர் அல்லாதவர்களுக்கென தனித்தனி இடங்கள் பிரத்தியேகப்படுத்தி வைத்திருப்பதும் பிராமணர்களுக்கு என்று ஒதுக்கப்படும் இடம் உயர்ந்த நிலையிலும் சுகாதார நிலையிலும் சரியாக இருக்கக் கூடிய இடங்களை ஒதுக்கி வைத்திருப்பதுடன் பிராமணர்களை மேல் பார்க்கவும் வைத்திருக்கிறார்கள். பிராமணர் அல்லாதவர்களுக்கு பிரத்தியேகப்படுத்தியிருக்கும் இடங்கள் ஒதுப்புறமாகவும் சுகாதார குறைவுள்ள இடங்களையும் ஒதுக்கி இருப்பதல்லாமல் இதன்மேல் பார்ப்போரும் பார்ப்பனரை நியமித்திருப்பதால் பிராமணர் அல்லாதவர்களும் மாணவ மாணவிகளும் கஷ்டமுற வேண்டியிருக்கிறது. இதனை பிராமணர் அல்லாத அரசர் செய்த தருமமாக இருந்தும் பிராமணர் அல்லாதார்களை மெஜாரிட்டியாக உடைய போர்டு நிர்வாகம் செய்தும் பிராமணர் அல்லாதவர்களின் நிலை இதில் கேவலமாக மதிக்கப்பட்டு வருவதை தஞ்சை ஜில்லா போர்டாரும் பிரசிடெண்டும் பார்த்து பிராமணர் அல்லாதவரின் தர்மத்தை பிராமணர் அல்லாதவர்களுக்கு உயர்வு கொடுக்கவேண்டும். அல்லது சமதையாகவாவது நடத்தி வர ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிராமணர் அல்லாத மாணவர்களே விழித்தெழுங்கள்.

(நா. வீ. க. எழுதியது.)

இவ்வருஷத்திற்கு சென்னை கார்பிரேஷனுக்கு நடைபெற வேண்டிய தேர்தல்கள் நடைபெற்றதில் சென்ற மாதம் பிராமணர் அல்லாதவர் ஏகமாய் தெரிந்தெடுக்கப்பட்டதும் வெற்றி பெற்ற பிராமணர் அல்லாதவர்களுக்கு ஒரு ஹாஸ்டலை சேர்ந்த பிராமணர் அல்லாத மாணவர்கள் அவர்களுக்கு ஒரு விருந்து நடத்தியதைக்கண்ட பிராமண மாணவர்கள் துவேஷங் கொண்டு வெளிக்கிளம்பியதும் அதனைக்கண்ட பார்ப்பன தலைவர்களும் பத்திரிக்கைகளும் மாணவர்களிடை ராஜிய ஜாதிய விஷயங்களை புகுத்துவது கூடா ஒழுக்கம் என்று பறை சாற்றித் திரிந்தன. ஆனால் 2-9-26ல் நடைபெற்ற தேர்தலில் பார்ப்பனராய் திரு. சத்தியமூர்த்திக்கு பலமாணவர்கள் தேர்தல் ஊழியம் புரிந்ததை ஒரு பார்ப்பனராவது தேசிய பத்திரிகையாவது கண்டிக்காமல் மூர்த்தி தனக்கு வேலை செய்த மாணவர்களை பாராட்டி வந்தனம் செலுத்துகிறார். இது மாணவர்களை ஒழுங்கான வழியில் இட்டு செல்வது போன்று எழுதப்படுகின்றன. இவைகள் அரசியல் ஜாதிய பகைகள் புகாது போலிருக்கிறது. மாமியார் உடைத்தால் மண் சட்டி மருமகள் உடைத்தால் பொன் சட்டி என்று ஒரு பழமொழி. அப்படித்தானிருக்கிறது இந்த விவகாரம். பிராமணர் அல்லாத மாணவர்களே இவர்களின் வார்த்தையைக் கண்டு ஏமாறுதீர்கள். நீங்கள் பார்ப்பன அபேக்ஷகர்களை வீழ்த்தவும் பிராமணர் அல்லாதவர்கள் வரும் தேர்தலில் வெற்றியடைய பாடுபடும்படி கேட்டுக்கொள்கிறேன். தனக்கு ஒரு விவாதமும் மற்றவருக்கு ஒரு விவாதமும் பேசும் மோசடி பார்ப்பனரின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து மோசம் போகாமலிருக்கும்படி கோருகின்றேன்.

சென்னை சித்தாந்தப் பிரகாச சபைத் தீர்மானம்.

"சென்னை சித்தாந்தப் பிரகாச சபையின் ஆதரவில் 19-9-26-உயில் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் கூடிய இச்சென்னை நகர மாசனங்கள், இந்துமத தரும ஸ்தாபன சட்ட மசோதாவை சட்ட சபையில் கொண்டு வந்து இடையூறாக வெழுந்த எல்லாவற்றையும் தமது விரிந்த மதிநுட்பத்தாலும், பரந்த கல்வி யனுபவங்களாலும், தகர்த்தெறிந்து, எத்தனையுஞ் சலியாது நின்ற சட்டமாக நிலை நிறுத்தி அற நிலையப் பொருட்களைப் பாதுகாத்தமையான் எல்லா நன்மக்களுடைய பெரு மதிப்பையும் பெற்று அழியாப் புகழ் நிறுத்திய சென்னை அரசாங்க முதல் அமைச்சர் கனம் பனகால் அரசர் அவர்கட்குத் தமது நெஞ்சார்ந்த வணக்கங்களை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்" என ஒரு தீர்மானம் நிறைவேறியதாகக் காரியதரிசிகள் அறிவிக்கின்றார்கள்.

வெளியூர்ச் செய்திகள்.

தேவகோட்டை;— சொர்ணமூர்த்தி பெண் பாடசாலையின் முதலாவது ஆண்டுவிழா 2—10—26 உ சனிக்கிழமை சென்னை "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் பல அறிஞர்களின் சொற்பெருக்குகளுடன் விழா நடைபெறும் என்று திரு. வெ. அழ. அழகப்ப செட்டியார் செ. பெ. பாடசாலை பரிபாலகர் நமக்கு அறிவிக்கிறார்.

மாயவரம்:— தாலூகா காங்கிரஸ் கமிட்டி புது வருட தேர்தல் அக்டோபர் மீ 6 உ புதன்கிழமை மாலை 3 மணிக்கு காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெறும் என்று காரியதரிசி திரு. வி. கலியாண சுந்தரம் அறிவிக்கிறார்.

போத்தனூர்:— தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்று 23—9—26 உ மாலை 5-30 மணிக்கு குறிச்சி மைதானத்தில் திரு. எஸ். வேணுகோபால் நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுகாலை திரு. முகம்மது இஸ்மால்கான் சாயபு தேவன்பு மற்றும் பலரும் ரயில்வே கம்பெனியின் ஒழுங்கீனமான நிபந்தனைகளைக் கண்டித்தும் 14—9—26 உ செய்த தீர்மானங்களை ஊர்ஜிதம் செய்தும் நாகையிலிருந்து வந்த கடிதங்களையும் தந்திகளையும் சபைக்கு வாசிக்கப்பட்டு, நாகை சகோதரர்கள் செய்துள்ள சத்தியாக்கிரக தீர்மானத்தை ஆதரித்தும், வேண்டிய உதவி செய்வதென்றும், திரு. கே. ரெங்காச்சாரியிடமுள்ள யூனியன்பணத்தை வசூல் செய்யகமிட்டி ஒன்றுஏற்படுத்தியும் தொழிலாளர்கள் ஒருநாள் கூலியை உடனே கொடுக்கவேண்டுமெனவும், தலைவர் கூற உறுதிமொழிகளுடன் கூட்டம் கலைந்ததென காரியதரிசி அறிவிக்கிறார்.

போத்தனூர்:— 28—9—26 உ மாலையும் ஷை மைதானத்தில் திரு. வேணுகோபால் நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் ரயில்வே தொழிலாளர்களின் மகாநாடு ஒன்று மாலை 5-20 மணிக்கு நடைபெற்றது. அதுகாலை நாகைக்குச் சென்று திரும்பிய திரு. சேக்சாவர் சாயபு அவர்கள் நாகையில் உள்ள நமது தொழிலாளர்களின் சம்பவங்களை எடுத்துரைத்தும் அந்நிய நாட்டில் உள்ள தொழிலாளர்களின் தீவிர முயற்சிகளை எடுத்துக்காட்டியும் நாகை தொழிலாளர்க்கு நாம் சகல உதவிகளைச் செய்யவேண்டுமென்றும், நமது சகோதரர்களுக்கு நாகையில் அதிகாரிகள் விடுத்துள்ள உத்திரவு மிக்க கடுமையானதென்றும் மிக்க உருக்கமாகப் பேசியதும், மற்றும் பலர் அதனை ஆதரித்துப் பேச தலைவர்முடிவுரைக் கூறுகையில் நமது நாகை தொழிலாளர்களுக்கு அதிகாரிகள் விடுத்துள்ள உத்திரவு மிகவும் கடுமையானதென்றும் அதை நாம் கண்டனம் செய்யவேண்டியது அவசியம் என்றும் கூற இரவு 7-:0 மணிக்கு கூட்டம் கலைந்ததென காரியதரிசி அறிவிக்கிறார்.

கரூர்:— 27—9—26 உ மாலை 6 மணிக்கு உமையவள் பெண் பாடசாலையில் திரு. கந்தசாமி செட்டியார் அவர்களால் சமீபத்தில் நடைபெற்ற முனிசிபல் எலக்ஷனில் வெற்றியடைந்த திருவாளர்கள் சி. பி. துரைசாமி முதலியார், சதாசிவம் பிள்ளை, குப்புராவ், சுப்பிரமணிய பிள்ளை இவர்களைப் பாராட்டி தேநீர் விருந்தொன்று நடத்தி வைத்தார். பல முக்கியஸ்தர்கள் வந்திருந்தனர். தேநீர் விருந்து முடிந்த பின் திரு. டி. எஸ். முத்துக்குமரசாமி பிள்ளை அவர்கள் தலைமை வகித்து வெற்றியடைந்தவர்களைப் பாராட்டி பேசினார். வெற்றியடைந்த கவுன்சிலர்கள் வந்தனம் கூறியபின் தலைவராலும் ஏனையவர்களாலும் விருந்து நடத்தி வைத்த திரு. செட்டியார் அவர்களுக்கு வந்தனோபசாரம் கூற இரவு 8 மணிக்கு இனிது முடிவுற்றதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

கதர்த் திருமணம்:— செந்தமிழ்ப் புலவரும் சிறந்த தேசபக்தருமாகிய கம்பமா நகர் ஜனாப் திரு. பீர்முகம்மது சாகிப் அவர்களுக்கு அக்டோபர் மீ 7 உ திருவாங்கூர் பந்தளம் பேட்டையில் பெண் வீட்டில் சுத்தக்கதர் திருமணம் நடைபெறும் என்று பெரிய குளம் தாலூக்கா காங்கிரஸ் காரியதரிசி நமக்கு அறிவிக்கிறார்.

இந்திய சட்ட சபைத் தேர்தல்.

தென்னிந்திய வர்த்தக சங்க பிரதிநிதி:— சென்னை இராஜதானி வியாபாரிகளுக்காக இந்திய சட்ட சபைக்கு தென் இந்திய வர்த்தக சங்க மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒரு ஸ்தானத்திற்கு தாம் ஒரு அபேக்ஷகராக முன் வந்திருப்பதோடு தமக்குப் போட்டியாக முன் வந்திருக்கும் ஒருவர் பம்பாய் இராஜதானியைச் சார்ந்த பிராமணரும் வியாபாரத் துறைகளில் அதிக அனுபோக மற்றவரும் போட்டியாய் முன் வந்திருப்பதோடு தாம் அநேக ஆண்டுகளாய் வியாபார பாங்கியில் டைரக்டராகவும் வர்த்தக சங்கத்திற்கு போஷகராகவும் இருந்து வியாபாரிகளுக்கு பல நன்மைகள் செய்து வந்திருப்பதோடு இதுபோது தம்மை இந்திய சட்ட சபைக்கு வர்த்தக சங்க மூலம் தேர்ந்தெடுத்தால் கூடுமானவரை வர்த்தகர்களுக்காக உழைக்கக் கூடுமென திருவாளர் எஸ். ஏ. எஸ். ஆர். எம். ராமநாதன் செட்டியார் அவர்கள் தெரிவிக்கிறார்.

கும்பகோணம்:— ஜில்லா 3-வது அரசியல் மகாநாடு, ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தீர்மானத்தின்படி சேர்ந்துள்ள உபசாரணைக் கழக அங்கத்தினர்கள் முதல் கூட்டம் 6—10—26 உ மாயவரம் காங்கிரஸ் காரியாலயத்தில் நடைபெறும் மகாநாட்டின் தலைமைப் பதவிக்கு டாக்டர்கள் திரு. பி. வரதராஜலு நாயுடு, டி. எஸ். எஸ். ராஜன். டி. எஸ். சாஸ்த்திரி, திருவாளர்கள் திரு வி. கலியாண சுந்திர முதலியார், எஸ். சுப்பிரமணிய நாயனார் ஆகிய இவர்களில் ஒருவரை தாலூக்கா காங்கிரஸ் கமிட்டிகள் சிபார்சு செய்து அனுப்ப வேண்டுமென்றும் உபசாரணைத் தலைவர் மகாநாட்டின் தலைவர் தேதி முதலியன 6 உ கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று ஆபீஸ் காரியதரிசி திரு எஸ் வி லிங்கம் அறிவிக்கிறார்

கும்டகோணம் சுயராஜ்யகட்சிக்கு சாவுமணி

கும்பகோணம் முனிசிபாலிட்டியில் இவ்வாண்டு காலியான ஸ்தானங்களுக்குகும்பகோணம் சுயராஜ்யக்கட்சி அய்யங்கார்கள் டவுன் ஆலில் கூட்டம்போட்டு பிரதிநிதிகளை தெரிந்து எடுத்து நாமினேஷனும்போட்டு பிரசாரங்களும் செய்தார்கள்செப்டம்பர் மாதம்17 உ முதல்28உ வரையில் தேர்தல் நடைபெற்றது இதில் சுயராஜ்யக் கட்சியார் 7 ஸ்தானங்களில் தோல்வியுற்றார் மற்ற ஒரு வார்டாகிய மேலக் காவேரியைச் சேர்ந்த கொட்டையூர் வார்டில் மட்டும் சுயராஜ்யக் கட்சியார் ஜெயமடைந்தனர் எனவே பிராமணக் கோட்டையாகிய இக் கும்பகோணத்தில் தோல்வியுற்ற பார்ப்பனக் கட்சிக்கு சாவுமணி அடித்தாய்விட்டது என்பதை பொது மக்கள் அறிக என்று திராவிட நேசன் எழுதுகிறார்

தேசீய அறிக்கை.

சென்னையிலுள்ள சுய நலக் கட்சிகளும், பிற்போக்கான கட்சிகளும் செய்துவரும் பிரசாரத்தின் பலனாகவும், முக்கியமாக சுயராஜ்யக் கட்சி பிராமணரல்லாதாருக்கு விரோதமாக கட்டுப்பாடாக பிரசாரஞ் செய்து வருவதன் பலனாகவும் ஜாதித் துவேஷம் வளருவதோடு தேசீய வாழ்க்கைக்கும் ஆபத் தேற்பட்டு வருகிறபடியாலும் இம்மாதிரியான நிலைமையை இன்னும் வளரவிட்டுக் கொண்டு போனால் பிராமணரல்லாதாருக்கு கெடுதல் வருவது ஒரு பக்கமிருக்க, தேசீய வாழ்க்கையே தமிழ் நாட்டில் நசித்துப் போய்விடுமாகையாலும், அந்த ஆபத்தை நீக்கும் பொருட்டும், தமிழர்களின் தேசீய உணர்ச்சியும், தியாக புத்தியும் மறுபடியும் சிறந்து விளங்குமாறு செய்யவும் தமிழ் நாட்டு தேசீய வாதிகளின் அவசரக் கூட்டமொன்று அடுத்த அக்டோபர் மாதம் 8 உ (புரட்டாசி 22 உ) வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு சென்னை, 31, பிராட்வேயிலுள்ள "தமிழ்நாடு" காரியாலயத்தில் நடைபெறும். நாட்டின் விடுதலைக்காக பல கஷ்டங்களை ஏற்று அநுபவித்த தேசீய ஊழியர்களே பெரும்பாலும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்கள். வரப்பிரிய முள்ளவர்கள் முன்னுடியே ஸ்ரீமான் பி. வரதராஜுலு நாயுடுவுக்கு [சேலத்திற்கு] எழுதி அநுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். ஜில்லாவிற்கு இரண்டொருவர் வந்தால் போதுமானது. கூட்டத்தின் நடவடிக்கைகள் அந்தரங்கமாகவேயிருக்கும்.

சட்ட சபைத் தேர்தல்.

அடுத்து வருகிற சட்டசபைத் தேர்தலுக்கு நான் ஒரு அபேக்ஷகனாக இருப்பதை நான் முன்னதாகவே தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் இதர அபேக்ஷகர்களோ, அவர்களைச் சேர்ந்தவர்களோ நான் இந்த எலக்ஷனுக்கு அபேக்ஷகனாக நிற்கப் போவதில்லையென்றும், வேறு சிலருக்கு அனுகூலம் செய்யும் பொருட்டு அபேக்ஷகனாக நிற்பதாகவும், அநேக இடங்களில் பொய்யாக பிரசாரம் செய்து வருகிறதாகக் கேள்விப்படுகிறேன். அம்மாதிரிச்சால்வதை ஒருவரும்நம்பக் கூடாதென்றும், நான் அபேக்ஷகனாக நிற்பது நிச்சயமானதால்எனக்கு ஒரு ஓட்டுக்கொடுத்துதெரிந்தெடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வேணுஉடையாக் கவுண்டர்,
பட்டக்கார், சங்கரண்டாம்பாளையம்.

பிரமேககுல சம்ஹாரி

சகல வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, தந்திமேகம், ரணம், அரைசிவப்பு, அண்ட வாதம், கைகால் கருப்பு, கிரந்தி, தடிப்புகள், திமிர் முதலியவைகளை ஐந்தே தினத்தில் தீர்க்கிறது. புட்டி 1-க்கு ரூ. 2.

மதன கோலாகல ரச்மணி மாத்திரை

மறதி, அசதி, சோம்பல், இடுப்புவலி இவைகளை நீக்கி ஞாபக சக்தி போகசக்தி, வீரியவிர்த்தி முதலியவைகளை யுண்டாக்கும். இரவில் சாப்பிட சிங்க வீர்யம்போல் தாதுபுஷ்டியளிக்கிறது. குளிகை 50 ரூ. 4. 25 ரூ. 2

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு (S. I.)

நாகை ரெயில்வே தொழிலாளர் சங்கம்.

—o—

21-9-26-உ செவ்வாய்க்கிழமை மாலை 5-30-மணிக்கு டவுன் போலீஸ் ஸ்டேஷன் மைதானத்தில் ஷை சங்க பொதுஜனக் கூட்டம், தொழிற்சாலை பொன்மலைக்கு மாற்றப் போவதில் அதிகாரிகள் 3 நாள் ஆப்சண்டை கொடுக்காமல் பிடிவாதமா யிருப்பதைப் பற்றித் தொழிலாளர் என்ன செய்யவேண்டுமென்ற முடிவான தீர்மானம் செய்ய சுமார் 6000 தொழிலாளர்களும் மற்றும் 2000 பொது ஜனங்களும் அடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. முன்பு உபதலைவர் ஸ்ரீமான் டி. கோவிந்தசாமி செட்டியார் அக்கிராசனம் வகித்துப் பின்பு தலைவர் ஸ்ரீமான் கே. சி. சுப்பிரமணியம் செட்டியார் Bar-at-law அக்கிராசனம் வகித்தார். காரியதரிசி கூட்டத்தின் நோக்கத்தை விரிவாக எடுத்துச் சொல்லியவுடன் தலைவர் முகவுரையாகப் பேசுகையில் மூன்று நாள் சுதந்தரத்தை அதிகாரிகள் கொடுக்காமல் பிடிவாதமாயிருப்பது கண்டிக்கத் தக்கதென்றும், அதனால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் ஏற்பட்டு விடாதென்றும், அதை ஞாயமான வழியிற் போராடிப் பெறவேண்டுமென்றும், வேலை நிறுத்தம் செய்யக்கூடாதென்றும், பேசினார். பிறகு ஜனாப் ஷேக்ஷர்வர் சாயபு அவர்கள் வேலை நிறுத்தமென்பது தற்சமயம் சரியான ஆயுதமல்லவென்றும் நம் தேசத்தில் மகாத்மா காந்தியடிகளால் ஏற்பட்ட சத்தியாக்கிரகமே சரியான ஆயுதமென்றும், சென்ற வருஷம் கோயம்புத்தூர் மில்லில் முதலாளிகளின் அக்கிரமத்தை சகிக்கமாட்டாமல் தொழிலாளர்கள் சத்தியாக்கிரகம் செய்து வெற்றிப்பெற்றிருக்கிறார்களென்றும் நீண்ட நேரம் விரிவாகப் பேசினார்கள். அதன் பின் சாம்பசிவம் பிள்ளை பேசுகையில் O. L, W. மிஸ்டர் லாம்பர்ட் துரைகளிடம் தான் பேசுகையில் இந்தியாவிலுள்ள மற்ற எந்த தொழிற்சாலைகளிலும் லீவு இல்லாமல் ஆப்ஸெண்டாயிருக்கிற சுதந்திரம் கிடையாதென்று O. L. W. துரை சொன்னாரென்றும் B. N. R. ரயில்வே தொழிலாளர் சங்கத்திற்குத் தந்தி கொடுத்துக் கேட்டதில் அங்கே மாதம் ஒன்றுக்கு லீவு இல்லாமல் 9 நாள் ஆப்ஸண்டா யிருக்கலாமென்று பதில் தந்தி வந்திருக்கிறதென்றும், M. S. M. ரயில்வேயிலும் ஆப்ஸண்டாயிருக்கலாமென்ற சுதந்திரம் இருக்கிறதென்றும், நம் அதிகாரிகள் செய்கிறதானது அக்கிரமமென்றும், வாக்கன் ஷாப்புத் தொழிலாளர்கள் பொன்மலைக்குப் போக மாட்டோமென்று ஒரே உறுதியாயிருப்பது பாராட்டத் தக்கதென்றும், அப்படி போகமாட்டோமென்று சொல்லுகிறவர்களுக்கு அதிகாரிகளால் ஆபத்து ஏற்பட்டால் நாமெல்லோரும் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்றும் பேசினார். பின்னர் முதன் முதல் பொன்மலைக்குப் போகக்கூடிய வாக்கன்ஷாப்பு தொழிலாளர்களாகிய 8 பேர்களையும் கேட்டதில் அவர்கள் தங்களுக்கு 3 நாள் சுதந்திரம் கிடைக்காதவரையில் பொன்மலைக்குப் போக ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டோமென்று சொல்லிவிட்டார்கள். மற்றும் அடுத்தப் படியாகப் போகிற 250 தொழிலாளர்களும் அப்படியே சொல்லிவிட்டார்கள்.

தீர்மானம்.

மாதம் ஒன்றுக்கு லீவு இல்லாமல் 3 நாள் ஆப்ஸண்டா யிருக்கலாமென்றிருக்கிற நஷ்ட முதல் சுதந்திரத்தை அதிகாரிகள் ரத்து செய்ததின்பயனாய் அதற்குக் கட்டுப்பட்டுப் பொன்மலைக்கு போகமுடியாதென்று சொல்லும் தொழிலாளர்களுக்கு அதிகாரிகளால் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் ஆபத்து ஏற்பட்டதின்பின் வேலை நிறுத்தம் செய்யாமல் வேலைக்குப் போய் சத்தியாக்கிரகம் செய்யத் தயாராக இருக்கிறோமென்ற பிரேபணையை ஸ்ரீமான் உத்திராபதி பிள்ளை பிரேரேபித்தார். ஷை தீர்மானத்தை அடியிற் கண்டவர்கள் முறையே ஆமோதித்தும் ஆதரித்தும் பேசினார்கள். ஸ்ரீமான்கள் காளியப்ப தேவர், சக்கரபாணி பிள்ளை, ரெங்கசாமி நாயுடு, சௌரிநாதன் மாணிக்க தாஸ், பரமசிவம், தெண்டபாணி, அண்ணாமலை பிள்ளை, ராமச்சந்திரம் பிள்ளை, கோவிந்தசாமி செட்டியார், சாமுவேல் பிள்ளை, கிருஷ்ணசாமி பிள்ளை, ஸ்ரீமான் மாணிக்க தாஸ் முதலியார் ஷை தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் இப்பொழுது நம்மிலிருந்து பல பிரசாரகர்கள் பொன்மலை, போத்தனூர், மதுரை, திருநெல்வேலி, தஞ்சை மாயவரம் விழுப்புரம் முதலிய இடங்களுக்குப் போய் நம்முடைய குறைகளைப்பற்றி பிரசாரம் செய்து அங்கங்கிருக்கப்பட்டவர்களையும் நம்மோடு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும், பொன்மலையில் நமக்காக வாங்கியிருக்கும் $1\frac{1}{4}$ ஏக்கர் உள்ள நிலத்தில் இப்பொழுது பொன்மலையில் வேலை செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்களைச் சேர்த்து ஒரு சங்கம் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், எல்லா ஊர் தொழிலாளர்களையும் ஒன்று கூட்டி ஒரு ஸ்பெஷல் மகாநாடு நடத்த வேண்டுமென்றும் மேற்கண்டவைகளுக்காக ஏற்படும் செலவுகளுக்கு நாம் பொன்மலை கட்டடத்திற்காக வசூல் செய்திருக்கும் 3000த்துச் சில்லரை ரூபாய்களையும் செலவு செய்துக்கொள்ளலாமென்றும், பேசினார். ஸ்ரீமான் டி. பி. ஆறுமுகம் பிள்ளை பேசுகையில் இப்பொழுது கூடிய சீக்கிரம் சத்தியாக்கிரகம் செய்யவேண்டியதில்லை. கொஞ்சம் பொறுத்துப் பார்த்துக் கொள்ளலாமென்று சொன்னார். தலைவர்கள் ஸ்ரீமான் கே. சி. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களும் காரியதரிசி டி. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களும் தொழிலாளர்கள் தற்சமயம் சத்தியாக்கிரகத்திற்கு தயாராக இல்லையெனத் தெரிகிறதென்று பேசினார்கள். தலைவர் மேற்கண்ட தீர்மானத்தை இப்பொழுது நிறைவேற்றாமல் தொழிலாளர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் அதன்பிறகு யோசித்துக்கொள்ளலாமாவென்று ஜனங்களைக் கேட்டார். அதற்கு ஜனங்கள் இப்பொழுதே தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தி

கதர்த் திருமணம்.

சேலம் ஜில்லா தர்மபுரி தாலுகா மாரண்டஹள்ளி திருவாளர்களான மா. நா. வெள்ளையப்ப உடையார், நடேச உடையார் ஆகியவர்கட்குச சென்ற ஆவணி-மீ 24-உ கதர்த் திருமணம் இனிது நடந்தது. கலியாணத்திற்கு திருவாளர் ம. ரா. குமாரசாமி உடையார் போந்து "மணமும் குணமும்," "வள்ளி திருமணம்" என்ற பொருள்கள் குறித்துப் பேசும்பொழுது காந்தியடிகளைப் பற்றியும், கதரைப் பற்றியும், போற்றிப் புகழ்ந்த சொற்பெருக்குகள் அனைவருள்ளத்தையும் ஈர்த்துவிட்டன. திருவாளர் மே. வே. துரைசாமி உடையார் "கதரும் கலியாணமும்," "பத்திரிகை" முதலிய தலைப்பின்கீழ் சுருக்கமாகப் பேசினார். இரண்டு நாட்களிலும் தலைமை தாங்கிய திருவலம் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சாது ஏகாம்பர சுவாமியவர்கள் "அன்பும் அருளும்" என்பது பற்றிப் பேசினார்கள். கும்பகோணம் திருவாளர் ப. நாராயணசாமி உடையார் "கடமை" என்பது குறித்து ஓர் சொற்பெருக்கிட்டார். மழையே இல்லாதிருந்து இவ்விரண்டு நாட்களிலும் ஏராளமான மழை பெய்தது. கதர் மணந்தான் மழைக்குக் காரணம் என்று மாரண்டஹள்ளி மக்கள் மணமக்களை வாயார வாழ்த்தினார்கள். திரு மா. நா. வெள்ளையப்ப உடையார் அவர்கட்கு தர்மபுரி காந்தி சங்கத்தார் ஓர் வாழ்த்துப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். "தெய்வீக ஆச்சிரம நிதி"க்கென ரூபாய் பத்து வசூலிக்கப்பெற்றது. "தெய்வீகன்" லிமிடெட் கம்பெனி குறித்து அன்பர் குமாரசுவாமி யவர்களால் பேசப்பெற்றது என்று சு. பாலசுப்பிரமணியன் அறிவிக்கிறார்.

பார்ப்பனீயத்தை ஒழித்த கதர்த் திருமணம்.

நிகழும் அட்சய-ஊு ஆவணி-மீ 26-உ சரியான ஆங்கிலம் (11-9-26) பூர்வ பக்ஷம் சதுர்த்தி திதி, சுவாதி நட்சத்திரம், அமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் உதையாதி நாழிகை $1\frac{1}{4}$-க்குமேல் 5-குள்ளாக கன்னிகா லக்கினத்தில், சிங்கப்பூர் ராபார்ட்ஸ் லயன் 22 நெ. கிரஹத்தில், சிரஞ்சீவி நாதமுனி நாயுடுவுக்கும் கிருஷ்ணம்மாளுக்கும் விவாக முகூர்த்தம் வெகு விமரிசையாய் நடந்தேறியது. மணமகனும் மணமகளும் கதராடையே யணிந்து பார்ப்பனரல்லாதாரினாலேயே முகூர்த்தம் நடத்தப்பட்டது. முகூர்த்தம் நடத்திவைத்த உபாத்தியார் சிவராய பிள்ளை வர்களுக்கும் ஷை முகூர்த்தத்திற்கு உதவி புரிந்த பூ. ரா. கோவிந்தசாமி பிள்ளையவர்களுக்கும், கோ. மருதமுத்து அவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்; என்று கா. தாமோதரம் பிள்ளை எழுதுகிறார்.

நின் பேரில் மேற்கண்ட தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஒருவருடைய எதிர்ப்புமின்றி ஏகமனதாய் நிறைவேறியது. இரவு 9-30-மணிக்கு அமைதியாக கூட்டம் கலைந்தது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

திருச்சி ஜில்லா

ஆதி திராவிடர் மகாநாடு

19-9-26-உ ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின்கீழ்க் கூடியது. மேற்படி மகாநாட்டிற்குத் திருச்சியிலிருந்தும் மற்றும் வெளியூர்களிலிருந்தும், அநேகர்கள் வந்திருந்தார்கள், முக்கியமானவர்கள் அடுத்த நாள் தலைமை வகிக்க வேண்டிக்கொள்ள ஸ்ரீமான் ஆர். வீரய்யன் அவர்களும், மற்றும் ஸ்ரீமான்கள், சென்னை ஆரியா, ஆம்பூர் எஸ் மூர்த்தி, ஈரோடு மைதீன் பாக்ஷா சாயபு, திருச்சி ஸ்ரீமான் உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை, எஸ். கே. கலிய பெருமாள் நாயுடு, சி. பி, ராஜகோபால் நாயுடு டி. வி. ரெத்தினம், பி. சிவபிச்சை, ஜெம்புலிங்கப் படையாச்சி, வேணுகோபால் நாயுடு, உறையூர் கே. வி. எம். லக்ஷ்மணன் மதுரை கே. ஏ. முத்துசாமி நாயுடு, எஸ். கூடலிங்கம் பிள்ளை, கே. திருமகள்மாறன் பிள்ளை, எஸ். பி. குருசைய பிள்ளை, மணவை ஜே. ராம சிங்கு, மணவை ரெ. திருமலைசாமி, பி. கே. குப்புசாமி நாயுடு கே. என். பத்மநாபன், பி. சுப்பிரமணியம் எல். வீராசாமி நாயுடு, சுந்தரராஜுலு நாயுடு பரமக்குடி பீட்டர் டானியல் உள்பட சுமார் 500 பேர் வரையில் வந்திருந்தார்கள். தலைவர் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அக்கிராசனர் முகவுரை பிரசங்கம் நடந்ததும் பல பெரியோர்கள் பல விஷயங்களைப்பற்றி பேசினார்கள். மறுநாள் ஸ்ரீமான் வீரய்யன் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு கூடினதும், தலைவர் ஸ்ரீமான் வீரய்யனுக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. ஸ்ரீமான்கள் ஆரியா, மூர்த்தி, ஈ. வெ. இராமசாமி நாயக்கர், வீரய்யன் முதலியவர்கள் ஆதி திராவிடர்களுக்கும் பொது மக்களுக்கும் உணர்ச்சியுண்டாகும்படி பேசியது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமான் வீரய்யன் பேசும்போதும் உயர்ந்த ஜாதியார்களுக்கு எச்சரிக்கை செய்யும்போதும் கண்களில் தண்ணீர் விட்டுத்தன்னை மறந்து கோவென்றழுதுகொண்டு பேசியது அங்குள்ளவர்களுக்கு ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கிற்று. இப் பத்திரிகையில் இடம் கிடைத்தால் பேச்சுக்களின் சுருக்கத்தை பின்னால் பிரசுரிக்கப்படும். 20-உ இரவு ஸ்ரீமான் நாயக்கர் காஞ்சிபுரத்திற்கு புறப்பட்டு விட்டார்.

நமது நிருபர்.

மதிப்புரை.

வீமேசுர உள்ளமுடையான்:— முதற்பாகத்தை யுணர்ந்த ஜோதிடர்கள் இரண்டாம் பாகத்தையும் அவாவோடு வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். இதுகாறும் வெளிவராத புதிய பதிப்பு மதுரை ஜோதிட சாஸ்திரி திரு. எஸ். கூடலிங்கம் பிள்ளையவர்களால் உரை எழுதப்பட்டது. பிழையற ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டது. சோதிடத்தில் நம்பிக்கையுள்ளோராதரிப்பாராக. விலை ரூ. 1—0—0

கிடைக்குமிடம்:—

க. காசிவிஸ்வநாத பிள்ளை,
புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை.

நற்போதனை சங்க அறிக்கை.

கட்டுரைப் போட்டி.

ஓர் பொற்காசு இனாம்.

"கற்பு."

கற்பு என்பது பற்றித்தெளிவாய் உயரிய கருத்தடங்கியதாய்க் கடிதத்தின் ஒரே பக்கத்தில் எத்தனை பக்கங்களும் வரைந்தனுப்பலாம். அட்சய ஆண்டு கார்த்திகைத் திங்கள் 15-ம் தேதிக்குள் நமக்குக் கிடைத்துவிடுமாறு அனுப்பிவைக்கப் பெறல் வேண்டும். வந்த கட்டுரைகளை ஆராய்ந்து, எக்கட்டுரை முதன்மையாய்த் தோன்றுகிறதோ அக் கட்டுரை எழுதியவர்க்கு ஓர் பொற்காசு (பவுன்) பரிசளித்துப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படும். கட்டுரைகளின் சகலஉரிமையும் சங்கத்திற்கே உரித்தாகும். இவ் வேற்பாட்டிற்கு இசைந்தே கட்டுரை அனுப்புதல் வேண்டும். சங்கத்தின் ஆண்டுச் சந்தா ரூபா ஒன்று. காலங்கடத்தி அனுப்பும் கட்டுரைகளையும் சங்க உறுப்பினராகாதவரின் கட்டுரைகளையும் ஒப்புக்கொள்ளப்படமாட்டா. கட்டுரைகளையும் பிறவற்றையும் ("திரு வி. மு. பொன்னையா, தலைவர், நற்போதனை சங்கம், மதுரை.) என்ற விலாசத்திற்கே யனுப்புதல் வேண்டும்.

சென்ற "நட்பு" என்ற கட்டுரைப் போட்டியில் கீழ்க்கண்டவரே பரிசு பெற்றார்:— அ. ராஜாமணி வண்டாரி, சாத்தூர். அவர் விலாசத்திற்கே ஓர்பவுனைப்பரிசாக அனுப்பிவிட்டோம்.

ச. முத்தழகு பிள்ளை,
உபகாரியதரிசி, நற்போதனை சங்கம்.

"தெய்வீகன்" லிமிடெட் கம்பெனி.

திருவாளர்களான திருக்கோவலூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் ம. ரா. குமாரசுவாமி உடையார், சேலம் ஜில்லா மாரண்டஹள்ளி மிட்டாதார் பார்க்கவபந்து மா. ர. வெங்கடாசல உடையார், தஞ்சை ஜில்லா அரசர் மடம் தமிழாசிரியர் சாமி. சிதம்பர உடையார், திருச்சி ஜில்லா பொன்மலை "தெய்வீகன்" ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார் ஆகியவர்கள் பின்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்:—

பங்கு ஒன்றுக்கு ரூபாய் நூறு விதம் சேர்த்து ஷெ கம்பெனியைப்பதிவு செய்துகொண்டு, ஓர் பதிப்பகம் வாங்குவதென்றும்; அதனைத் திருச்சியில் வைத்து "தெய்வீகன்" பத்திரிகையை நடத்துவதென்றும், முந்திய இருவரும் பார்வையாளர்களாகவிருந்துவருவதென்றும், பிந்திய இருவரும் தாள் ஆளர்களாயிருக்க வேண்டுமென்றும், பெரம்பலூர் தாலூகா முதலாவது பார்க்கவ குல மஹாநாட்டிலும், மாரண்டஹள்ளி பெருங்கூட்டத்திலும் நிறைவேறிய தீர்மானத்திற்கிணங்க விரைவில் பத்திரிகை தொடங்கவேண்டுமென்று பங்குகள் சேர்க்கப்பெற்று வருகிறது. இதுகாறும் 16 பங்குகள் சேர்ந்திருக்கின்றன.

தேசீய ஒற்றுமைச் சங்கம் சூழ்ச்சி மயமானது.

குடி அரசு பத்திராதிபர் அவர்களுக்கு.

எனதன்புமிக்க ஐயா!

நாங்கள் பலவிதமான தமிழ் பத்திரிகைகளைச் சென்னையிலிருந்து வரவழைத்துக் கவனமாய்வாசித்துக்கொண்டு வருகிறோம். இவ்விதமான பத்திரிகைகளுக்குள் தேசியத்தைப் பரவச் செய்வதும் பார்ப்பனியத்தை ஒழிக்க முயற்சியெடுத்துக்கொண்டு உண்மையாய் உழைப்பதும், நமது ஈரோடு 'குடி அரசு' ஒன்றே என்று சொல்லலாம்.

நாளிது வருஷம் ஆடிமாதம் 31-உ. வெளிவந்த நமது அரசின் தலையங்கத்தில் "உஷார் உஷார், உஷார், பார்ப்பனர்களின் புதிய தந்திரம்" என்று பெரிய எழுத்துடன் அச்சிட்டு இருப்பதைப் பார்க்க எங்களுக்கு விடா நகைப்பைத் தருகிறது.

அதாவது பார்ப்பனரல்லாதாரையும், பாமர ஜனங்களையும், ஏமாற்றித் தங்கள் வலைக்குள் சிக்கவைத்துக்கொண்டால், அதிகாரமும், சுதந்திரமும், அடைவதுடன் பொது மக்கள் அடையும் சமத்துவத்திற்கும் முற்போக்கிற்கும், முட்டுக்கட்டையாயிருக்கலாமென்று கருதித் தங்கள் வஞ்சக சூழ்ச்சிகளாலோ, அல்லது தங்கள் மாயா சக்தியாலோ, பொது மக்களை ஏமாற்றித் தங்கள் கட்சியை வெற்றி கொள்ளலாமென்று கருதித் தற்காலம் நமது நாட்டில் தேசீய ஒற்றுமைச் சங்கம் என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தப்போகிறார்கள் போலும். முன் இந்து மகாசபையை நமது நாட்டிற்குள் நுழையவிடாமல் துரத்தி அடித்த கழியை மறந்துவிட்டார்கள் போலும். நமது உலக சிரேஷ்டர் மகாத்மா காந்தியால் நடத்தப்பட்டு வந்த நிர்மாணத் திட்டமும் பகிஷ்கார திட்டமும் கொண்ட ஒத்துழையாமை காங்கிரஸ் ஒழிந்துவிட்டதென்று நினைத்துவிட்டார்கள் போலும்; ஆனால் இவர்களுடைய தந்திரத்திற்கும் வஞ்சக சூழ்ச்சிகளுக்கும், பிராமணரல்லாதாரும், பொது ஜனங்களும் ஏமாந்துவிடமாட்டார்கள். இதை ஷெ சங்கத்தை ஸ்தாபிக்க நினைக்கும் சுயநலக்காரர்கள் திண்ணமாயறிந்துகொள்வார்களாக. ஆனால், தற்காலம் நடைபெற்றுவரும் வகுப்பு வேற்றுமையை நசுக்கவும் அடிமைத் தனத்தையும், தாழ்மை நிலையையும் போக்கி சமத்துவத்தையும், சுயமரியாதையையும், விடுதலையையும், பொது மக்களுக்கு அளிக்கும்படியும், உலக சிரேஷ்டர் மகாத்மா காந்தியவர்கள் வந்து தலைவராயிருந்து நடத்தும்படியும், எங்கள் முழு மனதுடன் கடவுளை இறைஞ்சுகின்றோம். என்று மலையா நாட்டிலிருந்து தேசியத் தொண்டர் திருவாளர் M. மூக்க பிள்ளை எழுதுகிறார்.

பங்கு சேர விழைவோரும் விவரமறிய விரும்புவோரும் அடியிற்கண்ட விலாசத்தாருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

தங்கள்,
சு. பாலசுப்பிரமணியன்,
மேலக்கண்டார் கோட்டை,
பொன்மலை, திருச்சி ஜில்லா.

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்" கோயமுத்தூர்

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதுப் கொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-16-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினுலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினுலும் முயற்ச்சியினுலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப் பட்டிருப்பதும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளது வரை யாதொரு போக்குகுத்தி யில்லாமலும் இருப்பதி லிருந்து மானேஜிங் டைரக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாவிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினுலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
மானேஜிங் டைரக்டர்.

31—5—26.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.
உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

ஸ்ரீவில்லிபுத்தூர்

பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி.
குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்
அரரூட் பிஸ்கட்.
சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.
சூஸ்பரி பிஸ்கட்.
புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.
பழம் கேக்.
எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சரஸ்வதி விலாசம் பிரஸ்ஸுக்கு எதிரில் செவ்வாய்பேட்டை, சேலம்.
மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள்,
நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல்
சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்.
ஆயிரக்கணக்கான
மூலபவுத்ர வியாதியஸ்தர்கள்.
சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

ஜீர்ணமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலிய வற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.



பெட்ரோமாக்ஸ் லைட்.
லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்டலாக் இனம்.
ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரிகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S.I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

வித்வத்வம்! அனுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது "**ஆனந்த குண போதினி.**

☞ ஆனந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவரத் துவக்கிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆனந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்.
25000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான் அல்லது போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 7-ம் பதிப்பு 700 பக்கம் கொண்ட ஓர் பெரிய புஸ்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
தபால் செலவு ரூ. 0—6—0.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெயில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐகோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

இனாம் இனாம்!!

ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபால் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222, மதராஸ்.

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.